காஞ்சி

விலை 20

26-11-67

வடாற்காடு மாவட்ட

தமிழக சட்டமன்ற உறுப்பினர்க

மா. பா. சாரதி—வேலூர்.

பன்னீர்செல்வம்—ஆம்பூர்.

எஸ். முத்துலிங்கம்—வந்தவாசி.

ஏ. சி. நரசிம்மன்—ஆரணி.

எஸ். ஜே. இராமசாமி—அரக்கோணம்.

சார், தெரியுமா சேதி?

மதிப்பு உயர்ந்தது?

கடந்த நான்கு மாதங்களுக்கு முன்புகூட ஸ்டெர்லிங் மதிப்பைக் குறைக்கப் போவதில்லை என்று கூறிக் கொண்டிருந்த பிரிட்டன், கடந்த 18-ம் நாளன்று 14.3 சதவீதம் மதிப்பைக் குறைத்து விட்டிருக்கிறது இதன்படி இந்தியரூபாய் மதிப்புக்குறைப்புக்குப் பிறகு 21 ரூபாயாகஇருந்த ஸ்டெர்லிங் மதிப்பு இப்போது 18 ரூபாயாக மட்டுமே இருக்கும். இதனையடுத்து இலங்கையும், பாகிஸ்தானும் தன் மதிபபைக் குறைக்க முனைந்தால் இந்தியாவும் தன் நாணய மதிப்பை மறு பரிசிலனை செய்ய வேண்டியிருக்கும் என்று பொருளாதார நிபுணர்கள் கருத்தறிவித்துள்ளனர். இதன் எதிரொலியாக அமெரிக்கா தான் இதுவரை விதித்துள்ள வரி இனங்கள் அனைத்தின் மீதும் சுமார் 10 சதவீதம் வரையில் உடனடியாக வரியை உயர்த்த உத்திரவிட்டுள்ளது. டாலர் மதிப்புக் குறைப்பது தொடர்பாக பிரிட்டன் கருத்துக் கொண்டிருக்குமானால், தானும் அதுபற்றி மறு பரிசீலனை செய்ய நேரும் என்று கூட அமெரிக்கா தெரிவித்துள்ளது. ஸ்டெர்லிங் மதிப்பைக் ...த்த பிரிட்டன், உள் நாட்டு விலைகள் உயர்ந்து ...தபடி எல்லா முன்னெச்சரிக்கை நடவடிக்கை ...ம் உடனடியாக மேற்கொண்டு செயல்படுத்தி ...து. ஏற்றுமதியைப் பெருக்கவும், இறக்குமதியைக் ...க்கவும் ஊக்கமளிக்கத் தக்க வரிச் சலுகைகளை ...து அறிவித்துள்ளது. உள்நாட்டில், வெளிநாட்டு ...தனத்துக்கும் பிரிட்டன் கோரிக்கை விடுத்துள்ளது. பிரிட்டனின் எதிர்க்கட்சி இந்த மதிப்புக் குறைப்பு நடவடிக்கையைப் பலமாகக் கண்டிக்க முன் வந்தனால் ஆளும் கட்சிக் கிடையே இருந்த கருத்துவேறுபாடு அகன்றுவிட்டனவாம்! நாணயத்தின் மதிபபுக் குறைந்து வேறுபாடுகள் அகன்றதால் உறுப்பினர்களின் மதிப்பு உயர்ந்துவிட்டது போலும்!

புரிந்துகொண்டால் நல்லது!

கடந்த சனிக்கிழமையன்றைக்கு நம் கவனத்துக்குக்கொண்டுவரப்பட்ட பட்டமளிப்பு விழாக்கள் இரண்டாகும். ஒன்று ரூர்க்கியில் நடைபெற்ற விழா, மற்றது தமிழகத்தில் சிதம்பரம் அண்ணாமலைநகர் விழா. முன்னதில் இந்தியப் பிரதமர் அவர்கள் கலந்துகொண்டு உரையாற்றினார். பின்னதில் தமிழக முதல்வர் அறிஞர் அண்ணா அவர்கள் கலந்துகொண்டார் பிரதமரின் உரையின்போது அடிக்கடி மாணவர்களின் குறுக்கீடு ...ந்தது. முதலமைச்சர் அவர்களது பேச்சின்போது ...தி பூத்திருந்தது. பிரதமர் பேச்சின் இடையே ...வர்கள் வெளிநடப்புச் செய்தனர். அண்ணா அவர் ... பேச்சில் மயங்கிக்கிடந்தனர். பிரதமர் பேசும் ... மொழிவாரி கிளர்ச்சி நாட்டுக்கு நன்மையை ... தீமையேபயக்கும் என்றாலும், ஒரு ராஜ்யம், ...ராஜ்ய மொழியை கற்க மறுத்தால் அது நாட்... பலவீனப்படுத்திவிடும் என்றும் குறிப்பிட்டார். ... பேச்சில் மொழி வெறியும், இந்தித் திணிப்பின் ... புறையோடிக்கொண்டிருக்கிறது. அறிஞர் ...ா அவர்களது பேச்சில் புத்துலகம் சமைத்து, ... விளைவித்து நாட்டைப் பொன்கொழிக்கும் பூமி ... ஆக்கத்தக்க ஆய்வுகள் மிளிர்ந்தன! இரண்டு ...ளிப்பு விழாக்கள்! இருபெருந் தலைவர்களின் ஒன்றுக்கொன்று எவ்வளவு வேறுபாடுகள்! எண்ணத்தில் எழுச்சியில் கருத்தோட்டத்தில் என்று தான் எண்ணத் தோன்றுகிறது.

ஐயோ, காங்கிரசே!

பதவி இறக்கத் தண்டனை காங்கிரசை என்ன பாடு படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை நினைக்கவே பரிதாபமாக இருக்கிறது, காங்கிரசாரின் அறிவின் இயக்கத்தைக்கூட அந்த தண்டனை முடக்கிவிட்டு விட்டதோ என்றும் ஐயம் ஏற்படுகிறது. தென்சென்னை இடைத்தேர்தல் வந்தாலும் வந்தது. தாங்கள் எவ்வளவு தூரம் கொதித்துப் போய்க் கிடக்கிறார்கள் என்பதையும் காட்டிவிட்டதே அது. கழக ஆட்சி, நாட்டு மக்கள் மீது பஞ்சமா பாதகங்களைக் கட்டவிழ்த்து விட்டுவிட்டது போலவும், நாட்டு மக்கள் எல்லாம் அவலக் குரல் எழுப்பி சத்தியமூர்த்தி பவனத்தை நோக்கி அபயம் அபயம் என்று ஓடிவந்து விட்டது போலவும் அது பிரசாரத்தை முடுக்கியது. புத்தி கெட்டுப் போகாத எந்தக் காங்கிரசாரும் மறுக்கமாட்டார்கள், தென்சென்னைத் தேர்தல் காமராசருக்கு ஒரு அரசியல் சோதனை என்பதை. காங்கிரசை எப்படியும் வெற்றிபெறச் செய்து காட்டவேண்டிய நிர்ப்பந்தம் காமராசருக்கே ஏற்பட்டிருந்தது. அ. இ. கா. க. தலைவர் தேர்தலை ஒட்டி. தேர்தல் முடிவு வெளியான ஒரு வார காலத்திலேயே தோல்வியின் எதிரொலி டெல்லியிலே எதிரொலிக்கத் தொடங்கிவிட்டது. 'நான் டெல்லியிலேகூட இருக்க விரும்பவில்லை' என்று நா தழதழக்கக் கூறவேண்டிய இரங்கத்தக்க நிலை. ஆனால், மீசையில் மண் ஒட்டவில்லை என்ற நிலையில் இன்னமும் சிலர் காமராசரைத் தூக்கி நிற்கவைக்கப் பார்க்கின்றனர், இதழ்கள்கூட சில இத்தகைய நிலைமைக்கு வந்திருப்பது கண்டு சிரிப்பு வருகிறது. தேர்தல் முடிவைப் பிரதிபலித்து, மெயில் என்ற ஆங்கில நாளேடு ஒன்று துணைத் தலையங்கம் எழுதி இருக்கிறது. இதழ்களின் முக்கிய பணி நிதர்ச்சன நிலைகளை, அப்படியே மக்களுக்குப் பிரதிபலித்துக் காட்டுவது என்பதுதான்! நடுநிலை பிறழாத ஏடுகள் இந்தத் தேர்தல் பற்றி அப்படித்தான் கருத்தறிவித்தன. இது கண்டு பொறுத காங்கிரஸ் ஏடொன்று, மெயிலின்மீது காய்ந்து, தன் காழ்ப்பைக் காட்டிக் கொண்டிருக்கிறது, தேர்தல் பிரசாரத்தின்போது அண்ணா அவர்கள், அரசியல் நிலைமையைத் துல்லியமாக விளக்கிக் காட்டி, இது தனக்கும் காமராசருக்கும் ஒரு பலப் பரீட்சை என்று தெரிவித்திருந்தார்கள். மெயில் இதழ் இதனை ஒத்துக்கொண்டு, நிலைமையை விளக்கிக் காட்டி இருக்கிறது. இதுபோன்று நியூயார்க் டைம்ஸ்சும் ஸ்டேட்ஸ்மெனும்கூட கட்டுரைகள் வெளியிட்டுள்ளன. என்றாலும் முடிவு வெளியாகும்வரையில் இதுபற்றி வாய் திறக்காமலிருந்த காங்கிரஸ், இப்போது மெயிலின் படப் பிடிப்புக்கு விளக்கம் கொடுக்க முன்வருகிறது. தற்செயலாக திரு. மாறன் அவர்கள் தோற்க நேர்ந்திருந்தால், அண்ணாவின் பேச்சை வைத்துக்கொண்டு காமராசரை பெரியவர்—மிகப் பெரியவர்—இமயம் அளவுக்குப் பெரியவர் என்றெல்லாம் கூத்தாடக் கனவு கண்டுகொண்டிருந்ததோ என்னவோ! முடிவு சாதகமில்லை என்றதும் பி. டி. கள்கூட கண்ணீரைத் துடைத்து முட்டுக்கொடுக்க வருவது 'ஐயோ! காங்கிரசே!' என்று சொல்லவேண்டும் என்பதற்காகத் தானோ என்னவோ!

—தொகுப்பு: ராஜீமணாளன்.

காஞ்சி

ஆண்டு சந்தா ரூ. 10   ஆறுமாதம் ரூ. 5

மலர் 4   26—11—67   இதழ் 18

மாநிலங்கள் ஒன்றுபடட்டும்!

மத்திய அரசுக்கு ஜனநாயக சித்தாந்தத்தில் நம்பிக்கை இருக்கிறதா இல்லையா என்பதைத் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டிய நிர்ப்பந்தம், இந்தியத் துணைக்கண்டத்திற்கு ஏற்பட்டுவிட்டது.

அரியானாவிலும், மேற்கு வங்காளத்திலும் அமைச்சரவைகளைக் கலைத்துவிட்டிருக்கிற ஜனநாயகப்படுகொலையானது நமக்கு இத்தகைய எண்ணத்தைதான் தோற்றுவிக்கிறது.

மாநிலங்களின் நலன்களைப் பேணிக் காப்பதற்குத்தான் மத்திய அரசு ஒரு இணைப்புச்சங்கிலியாக இருந்துகொண்டிருக்க வேண்டுமே அல்லாமல், மத்திய அரசினைத் தாங்கிக்கொண்டிருக்க மாநில அரசுகள் இயங்கியாக வேண்டும் என்பதில் என்ன ஜனநாயக மரபு இழையோடுகிறது என்பது ஐயத்திற்கிடமாயிருக்கிறது.

தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி சுட்டிக் காட்டுவதுபோல, அதிகாரங்கள் ஒட்டு மொத்தமாக ஒரு இடத்திலேயே குவிக்கப்பட்டிருப்பதன் பிரதிபலிப்புக்களே இத்தகைய படுகொலைகள்.

அஜாய் முகர்ஜியின் ஆதரவாளர்கள் 153 பேரில் 17 பேர் தங்கள் ஆதரவைத் திரும்பப்பெற்றுக்கொண்டதனால் ஏற்பட்ட நெருக்கடியைப் பயன்படுத்திக் கொண்டு, அந்த 17 பேருக்கு 130 காங்கிரசாரின் ஆதரவைத் தந்து தான் புதிய ஆட்சி அமைக்க அனுமதிக்கப்படுகிறது என்பதை ஜனநாயக மரபுக்கு வக்காலத்து வாங்கி வரிந்து கட்டிப் பேச வருவோர் எப்படி விமர்சிப்பார்களோ நமக்குத் தெரியாது.

130 பேர் உள்ள காங்கிரஸ், 17 பேரின் துணையைக் கேட்டுப் பெற்றுக்கொண்டு, ஆட்சி அமைக்க முன்வந்திருந்தால்கூட ஜனநாயகக் கண்துடைப்பு என்று சமாதானமடைய முடியும். அல்லாமல் 17 - பேருக்கு 130 பேரின் ஆதரவாம்! பி. சி. கோஷ் முதலமைச்சராம்! முற்போக்கு ஜனநாயக அணியின் ஆட்சியாம்!

கூட்டணித் தலைவர் அஜாய் முகர்ஜி ஒரு நல்லவர்—சிந்தனையாளர். நக்சல் பாரி கலவரங்கள் நிகழ்ந்த போது மத்திய அரசின் உதவியைக் கோரி இருப்பதிலிருந்து, ஜனநாயக சித்தாந்தத்தில் இவர் எப்படி இயங்கி இருக்கிறார் என்பதைப் புரிந்துகொள்ள முடியும். இப்படிப்பட்டவர்கள் ஆட்சியில் இருக்கக்கூடாது என்பது மத்திய அரசின் கருத்து என்பதைவிட, எந்த ஒரு மாநிலத்திலும் காங்கிரஸ் அல்லாத ஒரு கட்சி அல்லது பல கட்சி ஆட்சியை மத்திய அரசு அனுமதிக்கத் தயாராயில்லை என்பதுதான் சரியானதா இருக்க முடியும்!

இதே நோக்கத்தில்தான் அஜாய் முகர்ஜியின்மீது பலப்பல அரசியல் நெருக்கடிகளை பலவந்தமாகத் திணித்து, ஒரு நெருக்கடியான கட்டத்தில் அவரைக் கொண்டுவந்து நிறுத்தியது.

திட்டமிட்ட சதியில் தற்காலிகமாக மத்திய அரசு வெற்றி கண்டபோதிலும், இதுபோன்ற சதிச்செயல்களை அது நீடித்துச் செய்து கொண்டுவர நாடு அனுமதிக்காது.

அரியானாவைப் பொறுத்தவரையில் அதன் அனுபவம் வேடிக்கையானதாகவும், விபரீதம் விளைக்கக் கூடியதாகவு மிருந்தாலும், அதனைக் கலைக்கக் கையாண்ட வழி முறைகளும், சட்ட முறைகளும், மேற்கு வங்காளத்தில் கையாளப்படவில்லை. இதுவும் ஒரு திட்டமிட்ட சதியேயாகும். அரியானாவைப் போலவே, அமைச்சரவையுடன், சட்ட மன்றத்தையும் மே. வங்கத்தில் கலைக்க உத்திரவிட்டிருந்தால் நியாய புத்தி படைத்தவர்கள் என்று எண்ணிக்கொள்ள முடியும்.

அரியானாவில், ஆட்சியைக் கைப்பற்றும் வாய்ப்பு காங்கிரசுக்கு இல்லை. எனவே, சட்டமன்றத்தையே கலைத்துவிட்டார்கள். மே. வங்க நிலை அப்படி இல்லை. காங்கிரசுக்கு அந்த வாய்ப்பு இருப்பதனால் அமைச்சரவையை மட்டும் கலைத்துவிட்டு, பெரும்பான்மை உறுப்பினர்கள் என்ற வாதத்தைக் கிளப்பி இருக்கிறது.

எந்தவொரு மாநிலத்தில் காங்கிரசுக்கு வாய்ப்பில்லையோ, அங்கெல்லாம் இத்தகு முறையைக்

அறிஞர் அண்ணா

அவர்களின் கருத்துக்கள்

கதை வடிவில்
நாடக வடிவில்
கட்டுரையாக
கவிதையாக

எதுவாக இருந்தால் என்ன?

பொங்கல் மலரிலிருந்து

'காஞ்சி'யில்

தொடர்கதை

வடிவில் தொடங்குகிறது!

கையாள காங்கிரசின் மேலிடம் ஒப்புக்கொண்டுவிட்டதோ என்றுகூட ஐயம் ஏற்படுகிறது.

கவர்னர் நியமன விஷயத்தில் அஜாய்முகர்ஜியின் வேண்டுகோளின்படி, தலைமை நீதிமன்றக் கருத்துக்களைக் கேட்டிருந்தால், அது வருங்காலத்துக்குப் பயன்தரும் ஒரு நல்ல நடைமுறையைத் தோற்றுவித்திருக்கும்.

முழு அதிகாரங்களும் தங்கள் கைவசமிருக்கிறது என்ற ஆணவத்திலேயேதான், ஒரு மாநிலத்திற்கு ராஷ்டிரபதி ஆட்சியென்றும், இன்னொரு மாநிலத்தில் 17 பேர் ஆட்சியென்றும் அதனால் வரையறை செய்ய முடிகிறது.

எப்படியானாலும், இதுபோன்ற முடிவுகளை காங்கிரசிடம் எதிர்பார்த்தே இருந்தாலும், பாரபட்சமான நடவடிக்கைகளை நாடு எதிர்பார்க்கவில்லை.

இவற்றிற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கவேண்டுமானால், குவிந்துகொண்டுள்ள அதிகாரங்களை மாநிலங்கள் பறித்துக் கொள்ளத்தக்க நடவடிக்கைகளை எடுத்தாலன்றி வேறு வழியே இல்லை. எஞ்சியுள்ள காங்கிரஸ் அல்லாத மாநிலங்கள் உடனடியாகக்கூடி இதற்கான முயற்சியில் ஈடுபடுவது ஒன்றுதான், மத்திய அரசின் ஆணவத்தைக் குறைக்கக்கூடிய வழியாக இருக்கமுடியும். எதெற்கெடுத்தாலும் அரசியல் சட்டம், அரசியல் சட்டம் என்று பேசிப்பேசி நாட்டை ஏய்க்கமுயல்வது போதும்; அரசியல் சட்டம் கூட, நாட்டுமக்களுக்கு நல்வாழ்வு தரும் திட்டங்களைக் கொண்ட, வழிமுறைகளைக் கணித்துக்கூறும் ஷரத்துக்களைக்கொண்ட ஒரு வரைமுறைதான். அதனைக் காட்டியே ஏய்ப்பது, நாட்டோர் இன்னமும் மடமையில் இருக்கிறார்கள் என்பதை உணர்த்துவதேயாகும். அரசியல்சட்டம் புனிதமானதுதான் என்று கருதப்படுமானால் அது 19 முறை திருத்தப்பட்டிருக்காது. எனவே மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கொடுக்கும் வகையில், அதனைத் திருத்த அல்லது புதிதாகவே வரையறுக்க எல்லா மாநிலங்களும் ஒன்றுபட்டாகவேண்டிய வேளை வந்துவிட்டது என்பதைக் கூறாமல் கூறுவதுதான் இந்த ஆட்சிக் கலைப்பு நடவடிக்கைகள்.

*

அ. சி. செட்டியார் மறைவு

மதுரை தியாகராசர் கலைக் கல்லூரியின் முதல்வராக இருந்த டாக்டர். அ. சிதம்பரநாதன் செட்டியார் அவர்கள் காலமான செய்தியறிந்து துணுக்குற்றோம்.

சம்பவம் நிகழ்வதற்கு முன்னர், இரண்டு மூன்று நாட்களாகவே அவர் காணாமற் போய்விட்டதாகவும், மூன்றும் நாள்தான் அவரது சடலத்தை ஒரு கிணற்றிலிருந்து கண்டெடுத்ததாகவும் வந்திருக்கிற செய்தி மேலும் கவலையை அதிகப்படுத்துகிறது.

திரு. அ. சி. செட்டியார் அவர்கள் இரண்டு மூன்று மாதங்களாகவே உடல் நலக் குறைவாய் இருந்தார் எனவும் உலவச் சென்ற அவர், தவறி கிணற்றில் விழுந்திருக்கக் கூடுமெனவும்கூட அறிவிக்கப் பெற்றுள்ளது.

எப்படியாயினும் அவரது மறைவு தமிழ்ப் பெருங்குடி மக்களுக்கு ஈடுசெய்ய முடியாத ஒரு பேரிழப்பு என்பதில் ஐயமில்லை.

ஆசிய - ஐரோப்பாக் கண்டத்தில் பல நாடுகளிலும் சுற்றுப் பயணம் மேற்கொண்டவர் அவர். அதுபோலவே, ஆங்கிலம், தமிழ்ப் புலமை மிக்கு, அவ் விருமொழிகளிலும் நிறைய நூல்களை எழுதியுள்ளார். சிறந்த ஒரு தமிழறிஞரை நாம் இழந்துவிட்டோம். தமிழ் நாட்டில், தமிழுக்குரிய இடத்தைத் தந்துப் போற்றுவதன் மூலமே, அவரது மறைவை நாம் ஈடுசெய்ய முடியும்.

எலுமிச்சம்பழம் சாப்பிடுங்கள்!

நாள்தோறும் எலுமிச்சம் பழம் சாப்பிடுங்கள். உங்கள் உடல் பளபளப்பாகவும் உறுதியாகவும் இருக்கும்.

எலுமிச்சம் பழத்தை சாறு பிழிந்து ஆறு பங்கு தண்ணீர் சேர்த்து சிறிது சீனி போட்டுக் கலக்கி குடியுங்கள். சுவையாகவும் இருக்கும் தாகமும் தீரும்.

சாறு பிழிவதற்கு மென்மையான தோலையுடைய எலுமிச்சம் பழமாகத் தேர்ந்தெடுங்கள். தடித்த தோலுடைய பழம் ஊறுகாய்ப் போடுவதற்கு நன்றாக இருக்கும்.

சாதாரண காய்ச்சல் அடிக்கிறதா அல்லது காய்ச்சல் வரும் போல இருக்கிறதா? எலுமிச்சம் பழத்தை இரண்டாக அறுத்து ஒரு பாதியை சாறு பிழிந்து ஒரு டம்ளர் வெந்நீரில் கலக்கி, இரண்டு கரண்டி தேனும் கலந்து குடியுங்கள்! உடனே காய்ச்சல் நிற்கும்.

எலுமிச்சம் பழ தேநீர் சாப்பிடுங்கள், பித்தம் நீங்கும். சூடான தேநீரில் பால் சீனிக்குப்பதிலாக பாதி எலுமிச்சம் பழத்தை சாறு பிழிந்து அதில் ஒரு பிடி சர்க்கரை போட்டுக் கலக்கி குடியுங்கள். சரியாகிவிடும்.

பல் ஆடுகிறதா? பல்லில் இரத்தம் வருகிறதா? உடல் பெருக்கிறதா? அடிக்கடி களைப்பு ஏற்படுகிறதா? உடல் வலியா? முகம் களையிழந்து காணப்படுகிறதா? எல்லாவற்றுக்கும் ஒரேயொரு எலுமிச்சம் பழம் போதும். நாள்தோறும் எலுமிச்சம் பழம் சாப்பிடுவதால் இந்தக் குறைகள் நீங்கும்.

தலைமுடி சுத்தமாகவும், மிருதுவாகவும் இருக்க அரை டம்ளர் தேங்காய்ப்பாலில் ஒரு பாதி எலுமிச்சம்பழச் சாற்றைக் கலந்து தலைக்குத் தேய்த்து குளியுங்கள்! தொடர்ந்து குளித்து வந்தால் பேன் கூட ஒழியும்.

எலுமிச்சம் பழத் தோலை வீணாக்காதீர்கள், காயவைத்து மஞ்சள் அல்லது சீயக்காயுடன் சேர்த்து அரைத்து வைத்துக்கொள்ளுங்கள். உடம்பில் தேய்த்துக் குளிக்க மணமாகவும் இருக்கும், குளிர்ச்சியாகவும் இருக்கும்.

நகத்தில் அழுக்குப் படிகிறதா? கை அழுக்காக இருக்கிறதா? எலுமிச்சம் பழத்தைத் தேய்த்து கையை கழுவுங்கள். கையும் நகமும் சுத்தமாகும்.

எலுமிச்சம் பழச் சோறும் எலுமிச்சம் பழ ரசமும் எல்லோருக்கும் தெரிந்ததுதான். பழம் புளியைவிட எலுமிச்சை நல்லது. தேங்காய் சட்டினியில் சில சொட்டு எலுமிச்சம் பழச்சாறு பிழிந்து கொண்டால் சுவையாக இருக்கும். சாம்பார், காய்கறி, பொரியல், குழம்பு முதலியவற்றில் சாப்பிடுவதற்கு முன்பு சில சொட்டு எலுமிச்சம் பழச்சாறு பிழிந்து விட்டால் நன்றாக இருக்கும்.

மோரில் ஒரு துண்டு எலுமிச்சம் பழத்தைப் பிழிந்து இரண்டு கருவேப்பிலையும் கிள்ளிப் போட்டுக் குடித்துப் பாருங்கள்! எவ்வளவு சுவையாக இருக்கிறது!!

புத்துலகம் சமைக்க போராட வாரீர்!

அண்ணா ஆய்வுரை

புன்னகை பூக்கும் நிலம் நோக்கி ஏழை மனிதனை—குடிசையில் வாழும் சாமான்ய மனிதனை—தனது குழந்தைகளின் எதிர்காலம்பற்றி ஏங்கும் மனிதனை, முன்னேற்றும் புனிதப் பணியில் ஈடுபட வாரீர்—என்று உங்களை அழைக்கிறேன்.

சமுதாயத்திற்குச் சேவை புரியும் உன்னதமான கடமைக்கு உங்களது உதவியையும் ஒத்துழைப்பையும் நான் விரும்பி வேண்டுகிறேன். இத்தருணத்தில் நீங்கள் கேலிப் புன்னகை புரிந்து கண் சிமிட்டி "சொல்வது யார்க்கும் எளிது"—என்று தயவுசெய்து கூறிட வேண்டாம்.

உங்களது வாழ்க்கை வழித் தடத்திலுள்ள இன்னல்களை நான் அறியாதவனல்ல;

உங்கள் மீதுள்ள சுற்றுச் சார்பின் அழுத்தத்தையும் செல்வாக்கையும் இல்லை—என்று ஒதுக்கித் தள்ளிவிடுபவனும் அல்லன் நான்.

எந்த உலகத்தில் உங்களது வாழ்க்கைப் பயணத்தைத் துவக்க இருக்கிறீர்களோ—அந்த உலகம் உங்களுடைய நம்பிக்கை ஒளியைக் குன்றச் செய்யலாம்; உங்கள் உறுதியை உருக்குலைக்கும் தன்மையில் இருக்கலாம்.

உங்கள் வாழ்க்கைப் பயணத்தில் உங்கள் இதயம் படிந்த கொள்கை—கோட்பாடுகளுக்கு முற்றிலும் எதிரான பழக்க வழக்கங்களை நேருக்கு நேர் சந்திக்கவேண்டிவரும்.

உலகில் சுயநலம் விரும்பிகள் கனக சிம்மாசனத்தில் வீற்றிருப்பதையும் அமைதியுருக் கொண்ட உழைப்பாளி ஒடுக்கப்படுவதையும் கண்டிக்கப்படுவதையும் நீங்கள் காண நேரிடலாம்.

எல்லாவகைக் கொடுங்கோன்மையும் உங்கள்மீது செலுத்தலாம்.

அந்தப் பயணத்தில் நீங்கள் எடுத்துவைக்கும் ஒவ்வொரு காலடியும் ஒவ்வொரு போராட்டமாக இருக்கலாம்.

நேர்மைக்குணம் படைத்த நிறை நோக்காளர்களையும்கூட உற்சாகம் குன்றவைத்து சுலபமும் வசதியும் மிக்கக் குறுக்கு வழியைத் தேர்ந்தெடுக்குமாறு பலவந்தப்படுத்தும் வலிமை மிக்கது இந்த சமூகச் சூழ்நிலை என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் அதே நேரத்தில் நாம் ஒன்றை உணரவேண்டும். சமூகத்திற்குப் பணியாற்றும் உள்ளுணர்வு மிக்க ஆடவர்—பெண்டிர் உள்ளடங்கிய அருவ கோட்டம் போன்ற தொடர்பான திருக்கூட்டம் இருந்து வருகிறது! அது இந்தப் புனிதப் பணியை வெற்றிகரமாக நடத்துகிறது; மனித சமுதாயத்திற்கு வளமிக்கப் பயன்களைத் தந்திருக்கிறது.

சமூகப் பணி எனும் இந்தத் தத்துவத்தை தமிழர்களாகிய நாம் உச்சிமேல் வைத்து மெச்சத்தகும் வகையில் கடைப்பிடித்துப் பாராட்டியிருக்கிறோம்.

புறநானூற்றில் அந்தக் கருத்தைக் காண்கிறோம்.

"உண்டால் அம்ம இவ்வுலகம்......

....

தமக்கென முயலா நோன்றாள்

பிறர்க்கென முயலுநர் உண்மையானே"

—இத்தகைய செழுமை மிக்கப் பாரம்பரியத்தின் வழித்தோன்றல்களாகிய நீங்கள் சமூகச் சூழ்நிலையின் அழுத்தத்திலிருந்து விடுபட்டு, உங்களது திறமைக்கேற்றபடி சமூகத்திற்கு உழைத்திட வேண்டும்!

நல்லது செய்ய நினைத்திடும் யாரும் — தங்கள் பாதையில் தட்டுப்படும் தடைக் கற்களை மக்களில் சிலர் நீக்கி உதவுவார்கள் என்று எதிர்பார்க்கக் கூடாது.

அந்தத் தடைக்கற்களோடு மேலும் சில கற்களை உருட்டி விட்டாலும்கூட மிகுந்த பொறுமையாயிருந்திடவேண்டும்.

தடைகளைச் சந்தித்துப் பெறும் அனுபவம் மூலமாகவே நமது வலிமை தெளிவாகும்; மேலும் பலப்படும். பிறகு அந்த வலிமையே தடைகளை வெல்லும் திறனாய் மாறும் என்கிறார் அறிஞர் ஆல்பர்ட் சுவிட்சர்.

பல்வேறு நாடுகளிலுள்ள பிரச்சினைகள் ஒரேமாதிரியான இயல்புடையவை எனினும் நமது நாட்டின் பிரச்சினைகளில் விநோதப் பண்பு சேர்ந்திருப்பதோடு தனித்தன்மையும் இருக்கும்!

எங்கோ ஏற்பட்ட கீறல்களிலிருந்து சிக்கல் எழுவது போன்ற தன்மை வாய்ந்ததல்ல நமது பிரச்சினை. அவ்விதம் இருக்குமாயின் அந்தப் பிரச்சினையின் தீர்வுக்கு ஆழ்ந்த கவனிப்பு மட்டும் போதுமானது.

ஆனால் நமது பிரச்சினைகள் இதயத்தில் ஏற்படும் மண் அரிப்பு போன்ற செயலால் ஏற்படுவது.

நமது பணிக்கு வயல்களைத் தேடிப் போக வேண்டிய அவசியமில்லை—இருக்கிற வயலில் உரம் போட்டு—உழவு செய்யும் நிலையில் இருக்கிறோம்!

ஆம்; தத்துவங்களைத் தேடிச் செல்ல வேண்டிய அவசியமில்லை, அதைவிடக் கடுமையான பணியில் ஈடுபட்டிருக்கிறோம். இருக்கிற தத்துவங்களைக் வகைப்படுத்தி — தொகைப்படுத்தி—தணிக்கைப்படுத்தும் நிலையில் இருக்கிறோம்.

கலாச்சாரத்தை நாம் வேண்டி நிற்கும் நிலையில் இல்லை. இருக்கிற கலாச்சாரத்தில் காலம் ஏற்படுத்திய

இப்போதுபோலவே இனியும் இணைக்குமே!

சிலந்திக் கூடுகளை அகற்றி—கலந்துவிட்ட கலப்படங்களை நீக்கும் பணியில் நிற்கிறோம்.

சுருங்கச் சொன்னால், நாம் நம்மையே கண்டு கொள்ளவேண்டிய நிலையில் இருக்கிறோம், நமது சிந்தனைக் கட்டிடத்தை மீண்டும் சீர்திருத்திக் கட்டவேண்டிய நிலையில் இருக்கிறோம்.

கண்ணியமிக்க எல்லாவற்றுக்கும் நாம் ஒரு காலத்தில் காவலர்களாக இருந்தோம். ஆனால் அழிவின் கிருமிகள் பல்கிப் பெருகிட அனுமதித்தோம்!

இன்று நமக்குள்ள பணி தூய காற்றையும் உதய சூரியனின் ஒளியையும் அனுமதித்து—நமது உண்மையான பழைய உருவையும் பொலிவையும் அடைய வேண்டும். அத்தகைய பொலிவுமிக்க உருவம்தான் உலகின் நெடுந்தூர நாடுகளிலும் நிலப்பரப்புகளிலும் நமது புகழைப் பரப்பியது.

நமது இலக்கியமும், கலையும், சிற்பமும் மன்பதை அறிவின் சிறந்த சின்னங்களாய்த் திகழ்ந்தன; ஆனால் அவை இப்போது காலம் ஆடிய சூறையாடல்களின் தழும்புகளை ஏற்று நிற்கின்றன; ஆகவேதான் நமது அருமை பெருமைகளைப்பற்றி வெளிநாட்டு சரித்திர ஆசிரியர்களிடம் கேட்கவேண்டிய நிலையில் இருக்கிறோம்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பட்டதாரிகளே! உங்களுடைய-உங்களது குடும்பங்களுடைய-நன்னிலைக்குப் பாடுபடுவதோடு, சமூகத்திற்கான பணியையும் நீங்கள் செய்யவேண்டியிருக்கிறது.

பகுத்தறிவு வாதத்தின் ஒளி விளக்கை ஏற்றிப் பிடிப்பவர்களாக நீங்கள் திகழவேண்டும்.

பகுத்தறிவு வாதம் என்பது அடிப்படை உண்மைகளை—நெறிகளை மறுப்பது என்பது அல்ல; போலித்தனமான எண்ணத்தையும் செயலையும் அழித் தொழிப்பது தான் பகுத்தறிவுவாதம்.

முனைப்புடனும்—உறுதியுடனும் நீங்கள் உழைக்க வேண்டும். ஏனெனில் நாம் பல நூற்றாண்டுகளாய் கப்பிவிட்ட சிலந்திக்கூடுகளை அகற்றவேண்டும்; காரண காரிய செயல் முறை உயர்ந்த நிலையிலிருந்து ஆட்சி புரியவைக்கவேண்டும்.

நமது காலத்திலுள்ள விநோதமான இன்னொரு உண்மை—நாம் இப்போது ஒரு நாட்டை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம் என்பது!

ஒருமைப்பாடு ஏற்படவேண்டும் என நினைப்பவர்களுக்கு உள்ளபடியே அந்தக் கருத்தில் ஆர்வம் இருக்கிறது என்றால், அந்தக் கருத்தைத் தெளிவாக இங்கு எடுத்துரைக்கவேண்டும்.

ஒற்றுமைக்கும் ஒரே தன்மைக்குமுள்ள வேறுபாடு புரியாது சிலர் குழப்பிக்கொள்கிறார்கள்.

ஒற்றுமை என்ற பெயரில் நாட்டின் ஒரு பகுதி மற்றொரு பகுதியின் அடிமைப் பண்ணையாக மாறுவதற்குத் தெரிந்தோ—தெரியாமலோ அனுமதிக்கக்கூடாது.

எவ்வளவுதான் உயர்ந்த இலட்சியமாக இருந்தாலும் நாம் அதற்காகத் தவறான செயல் முறையைப் பின்பற்றுவோரில் ஒருவராக இருக்கமுடியாது.

சுதந்திர நாளின்போது ராஜாஜி அவர்கள் தமக்கேயுரிய நுண்மான் நுழைபுலத்துடன் கூறினார்கள்.

'நமது நாட்டின் அரசியல் அனுபவம்—இரும்பையும் உலோகங்களையும் உருக்கி வார்ப்படத்தில் வார்த்து தேய்மானத்திற்கு அஞ்சாத உருக்கு செய்வதுபோன்றதாகும்.

இது சில நாடுகளில் உருவாகியுள்ள சைனா பீங்கான்போன்றதல்ல. அந்த நாட்டினரின் ஜனநாயகமெல்லாம் பிளாஸ்டிக் செய்வதுபோல் எளிதில் செய்துவிடக் கூடியது. ஆனால் நமக்கு இங்கே ஈடுபாடு—உலோகங்களிடம்.''

தேசிய ஒருமைப்பாடு என்பது நல்லகுறிக்கோள். மதிக்கத்தக்கது. எனினும், அதற்காக மொழித்துறையிலோ — பொருளாதாரத் துறையிலோ அநீதியையும் ஆதிக்கத்தையும் சகித்துக்கொள்ள முடியுமா?

சகித்துக்கொள்ள முடியாது என்பதற்காகத்தான் இந்த தமிழக அரசாங்கமே ஏற்பட்டிருக்கிறது.

இந்தியை ஆட்சி மொழியாக ஏற்கக் கட்டாயப்படுத்துவதற்கு எதிரான மக்களின் வலிவுமிக்க உறுதிப்பாட்டையே இந்தத் தமிழக அரசு பிரதிபலிக்கிறது

நாம் ஆங்கிலம் இணைப்பு மொழியாக நீடிக்க வேண்டும் என்று வேண்டுவதை சிலர் தவறாகவும் திரித்தும் கூறுகிறார்கள்.

நிலைக்க முடியாத வாதங்களையும் விவாதத்திற்குரிய புள்ளி விவரங்களையும் காட்டி அவர்கள் வீராப்பு பேசியபடி பிரிவினைப் பூச்சாண்டியைக் கொண்டுவந்து மிரட்டல்கள்—ராணுவம் ஆகியவற்றின் மூலம் மக்களை மௌனமாக்க முயல்கின்றனர்.

பிரச்சனைகளை ஆதிபத்ய முறைகளில் எப்போதும் தீர்க்க முடியாது. குறிப்பாக இந்த மொழிப்பிரச்சினை நமது வாழ்க்கை வழியுடன் நிகழ் காலத்திலும் எதிர் காலத்திலும் நெருக்கமாக இணைந்துள்ளதாகும்.

தமிழக அரசாங்கம், தவறும் தடுமாற்றமும் இல்லாதசொற்கள் மூலம் விளக்கியுள்ளது.

தமிழ், ஆங்கிலமும் நமது எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்யும்.

தமிழ், இந்த மாநிலத்தின் ஆட்சிமொழியாகவும் ஆங்கிலம் இணைப்பு மொழியாகவும் இருக்க வேண்டும்.

ஆங்கிலம் நமது நாட்டிற்கும் உலகின் பிற நாடுகளுக்குமிடையே இணைப்பு ஏற்படுத்த பணி புரியும் என்று இந்தி ஆதரவாளர்கள்கூட ஒப்புக் கொள்கிறார்கள்.

அதை அவர்கள் ஒப்புக்கொள்வார்களானால் இங்கு இணைப்பு ஏற்படுத்த இந்தி இணைப்பு மொழியாக இருக்கவேண்டும் என்று ஏன் கேட்கிறார்கள்?

வெளிநாட்டினருடன் இணைப்புக்கொள்ள எந்த மொழி பணியாற்றுகிறதோ — அதே மொழி அதே

அவன்தான் மனிதன் இதுதான் வாழ்வு!

இணைப்புப் பணியை இந்தியாவுக்குள்ளும் செய்யும் ஆற்றல் பெற்றிருக்கிறது.

இரு இணைப்பு மொழிகள் தேவை என்று கூறுவது பெரியபூனை செல்வதற்கு பெரிய வழி சுவரில் இருக்கும் போது பூனைக்குட்டி செல்ல இன்னொரு வழி செய்ய வேண்டும் என்பதற்கு ஒப்பானதாகும், பூனைக்கு என்ன வழியோ—அது பூனைக்குட்டிக்கும் வழியாகும்!

ஆங்கிலம் அன்னியநாட்டுமொழி என்று சிலர் வாதிடுகிறார்கள்,

அன்னியநாட்டு கோதுமையை அன்னியநாட்டு கப்பல்களில் கொண்டுவருகிறோம்.

நாம் அன்னிய உதவியை பணம் ரூபமாக மட்டுமல்ல—தொழில் நுட்ப உருவிலும் வேண்டுகிறோம்.

ஒருவர் மாற்றி ஒருவர் நமது தலைவர்கள் மேற்கு நாடுகளுக்கும் கிழக்கு நாடுகளுக்கும் சென்று எத்தகைய உதவி கிடைக்கிறதோ—அதை முடிந்த அளவு பெற முயல்கிறார்கள் என்ற செய்தி இல்லாமல் ஒரு வாரம்கூட நகருவதில்லை. இதற்கெல்லாம் மேலாக நமக்கென்று தனியாக இருந்த சில முறை துறைகளைக் கூட கைவிட்டு இருக்கிறோம்!

கிராமப்புற பொருளாரத்தை மட்டும் நாம் நம்பியிருக்கவில்லை! டிராம்பே (அணுசக்தி நிலையம்) எண்ணூர் (அனல் மின்சார நிலையம்) ஆகியவை அமைய வேண்டும் என்று விரும்புகிறோம்.

அவைமட்டும் அன்னியத் தன்மை வாய்ந்தது என்று நாம் உணரவில்லை. ஆனால் மொழி விஷயத்தில் மட்டும் நாம் மிகத் தீவிரமான தேசியவாதிகளாக வெளிக்காட்டிக் கொள்கிறோம்; ஆங்கிலம் அன்னிய மொழி என்று பகட்டுக் காட்டுகிறோம்.

உள்ளபடியே (இலக்கிய நோக்கில்) ஷெல்லி பைரன்—கீட்ஸ்-கால்ரிட்ஜ்-எமர்சன்—பேகன்,-ஆகியோர் நமக்கு அன்னியர்களா? திருவள்ளுவர் வெறும் தமிழர் மட்டுமா? அவர்கள் எல்லாம் உலகக் குடிமக்கள்—உலகப் பேராசியர்கள்.

அவர்களது எண்ணங்களை மிளிரச் செய்யும் மொழிகள் வேறு நாட்டிலிருந்து வருகிறது என்பதால் தள்ளிவிடக்கூடியவை அல்ல!

எனினும், தமிழ் மொழியை கல்லூரிப் பாட மொழியாக ஆக்கத் தேவையான கவனத்துடன் படிப்படியாக செய்யும் கொள்கையை ஏற்று செயல்படுத்துவதால்—ஆங்கிலத்திற்கு தமிழைவிட உயர்ந்த இடம் தந்துவிட மாட்டோம்,

சாதாரண மனிதனை—கீழ்த்தட்டு மனிதனை உயர்த்தும் பணியில் நாம் எங்கிருந்தாலும் ஈடுபடவேண்டும். அந்த மனிதன்தான் இந்த நாட்டின் பிறநாடுகளின் முதுகெலும்பாய் இருப்பவன். அந்த மனிதனின் ஓவியத்தை உங்கள்முன் சமர்ப்பிக்க விரும்புகிறேன். அவன் நம்புதற்கு முடியாத நிலையில் வாழ்பவன். ஆனால் மனித குலத்தின் மூன்றில் இரண்டுபகுதியாய் இருப்பவன். குடிசையில் அவன் வாழ்கிறான். அவனால் எழுதவோ படிக்கவோமுடியாது. அவனது சக்தி நோயினால் பீடிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஒரு நாளைக்கு 15 மணி நேரம் வேலை செய்கிறான், அவனும் அவனது குடும்பமும் வழக்கமாகப் பசியுடனிருக்கிறது. இளவயதிலேயே அவன் இறந்துவிடுகிறான். ஆனாலும் அவன் தனது குழந்தைகளைப்பற்றி நம்பிக்கை கொண்டிருக்கிறான். அவர்கள் வலிமையுடனும், உடல் உறுதியுடனும் இருக்க விரும்புகிறான். அவர்கள் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாக இருக்க விரும்புகிறான். சமாதான உலகில் தனி மனித உரிமையுடன் இருக்கவேண்டும் என்று விரும்புகிறான்—இத்தகையவன்தான் (கீழ்தட்டு) சாமான்ய மனிதன்.

இந்த மனிதன் தனக்கு இழைக்கப்படும் அநீதியை உணர்ந்து கொள்ளத் துவங்கி விட்டான்—அதன் விளைவாகக் கிளர்ச்சிகளும் மோதல்களும் ஏற்படுகின்றன.

பல நாடுகளில் அவனது நிலையை உயர்த்தும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன—

உறுதி எடுத்துக் கொள்ளுங்கள்—நாம் பின்தங்கப் போவதில்லை—நமது சாமன்ய மனிதனை இடர்ப்பாடான நிலையில் விட்டுச் செல்லப் போவதில்லை!

அடிப்படை பலவீனமாயிருந்தால் — மகுடமும் இருளில் வீழும்;

நமது நாகரிகமும் பண்பாடும் தொன்மை வாய்ந்தவை. அதில் தொய்வு உண்டாகச் செய்துவிட்டோம். காலத்தால் அதில் வடுக்கள் தோன்றிவிட்டன. அவற்றை நோக்கி நம்முடைய பண்பாட்டையும் நாகரிகத்தையும் மீண்டும் நிலைநாட்டுவதோடு மற்றைய நாட்டாரின் சாதனைகளிலிருந்து நாம் கற்றறிய வேண்டும்.

அறிவின் எந்தவொரு துறையாயினும் அதில் நமக்கென்ற ஒரு முறையில்லாமல் இல்லை. அற்புதமான உதாரணங்களாகத் திகழும் சான்றுகள் நமக்குண்டு. எனவே நம்முடைய வாழ்க்கை முறைகள் அழியாதவை; அமரத்துவமுள்ளவை என்று நாம் கொண்டாடலாம்.

ஆயினும் அந்த முறைகளை இளமை குன்றாது பசுமையோடு தீவிரத் தன்மையோடு கூடியதாக வைத்திருக்க நாம் தவறிவிட்டோம். அவை சீரழிய நாம் இடமளித்து விட்டோம்.

ஒரு வாழ்க்கை முறை நிலைக்க வேண்டுமானால் என்றென்றும் இளமை குன்றாததாகவும் மாறுதலை ஏற்றுக் கொள்ளத்தக்கதாகவும் இருக்கவேண்டுமென்று டாக்டர் இராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

அதாவது புதிய கருத்துக்களை ஏற்றுக்கொள்ளக் கூடிய இளம் இதயத்தைப்போல் பசுமையானதாக விளங்க வேண்டும்.

ஈவோஸ் என்னும் தேவதை 'ஆண்டவனே! என் காதலனுக்கு அமரத்துவம் கொடு' என்று இறைவனை வேண்டினாள். சாகா வரம் பெற்ற அவள் காதலன் முதுமை அடைந்தான். அந்த முதுமையினால் தளர்வுற்று முடக்கமுற்றான். எல்லோரும் அவனைக் கண்டு வெறுத்தனர். சிலர் வருந்தினர். அமரத்துவம் பெற்ற அவன் இறக்கமாட்டோமா என்று இறைஞ்சினான்.

தேவதை ஈவோஸ் பெருமூச்செறிந்து 'இறைவா என் காதலனுக்கு நீங்கா இளமை கேட்டுப் பெறவேண்

(12-ம் பக்கம் பார்க்க)

கண்ணீர் பூக்கள்!

—துறவி—

இறந்துவிட்டான் இருங்கோவன் என்ற கண்ணீர்
இறக்குமதி செய்கின்ற செய்தி கேட்டுப்
பொறிகலங்கிப் போய்விட்டாள் அருணு; சோகப்
புனல்மழையில் துணைவிழியை நீந்த விட்டு;
பிறப்பதுவும் இறப்பதுவும் மனித வாழ்வில்
பழகிவிட்ட சம்பவந்தான், ஆனுல் யாரும்
உறுதிமனம் கொள்வதில்லை சாவைக் கண்டு
உடைந்துமனம் குமைபவரே உலகில் உண்டு

கல்லூரி வகுப்பறையில் சற்று முன்பு
குறள்நூலின் நிலையாமை அதிகாரத்தைச்
சொல்விளக்கிப் பொருளுரைத்தாள் அருணு. அந்தச்
சோகமொழி நீதியுரை தனக்கே நேர்ந்த
வல்வினையின் கொடுமையினை நினைந்து, நெஞ்சம்
வேதனைத்தீ யில்கருகத் துடிது டித்தாள்
நில்லாமல் சட்டென்று உடைந்து போகும்
நீர்க்குமிழி வாழ்க்கைக்கு உறுதி ஏது?

நேற்றிருந்தார் இன்றில்லை; இதுவே இந்த
நிலஉலகின் அழியாத நீதியாகும்
ஆற்றவொணு அவலத்தை நிரப்பி நம்மை
அலைக்கழிக்கும் கொடுஞ்சாவைக் கடந்து நிற்கும்
ஆற்றலினைப் பெற்றுள்ளார் எவரும் இல்லை
ஆனந்த வாழ்வெல்லை மரணம் தானே?
கற்றுசல் நம் வாழ்வு நின்றே தீரும்
கண்ணீரின் வரலாறு தொடர்ந்தே செல்லும்

புறப்பட்டாள் இருங்கோவன் இல்லத் திற்குப்
புலம்புகின்ற நெஞ்சோடு அருணு; துன்ப
அறிமுகத்தைச் செய்கின்ற விட்டில், விம்மி
அதிருகின்ற அழுகையொலி எதிரொ லிக்க
உறவினர்கள் ஒருபக்கம் கதற, செத்த
உடல்மீது அவன்மனைவி புரள, அந்த
அறையினிலே குமுறுகின்ற துயரத் தாலே
அருணுவும் அழுதுநின்ருள் மௌனமாக

தனக்குமுன்னே வேதனையில் எவரும் வாடி
துடிப்பதனை விரும்பாத இருங்கோ, கூடி
அனைவருமே கதறுகின்ற கண்ணீ ருக்கு
ஆறுதலை கூறுமல் துயிலு கின்ருன்
'இனிநமக்குள் பிரிவில்லை' என்று சொன்ன
இருங்கோவன் தனைப்பிரிந்து போன தாலே
மனக்குமுறல் தணியாத அருணு கண்ணீர்
மூடுகின்ற விழியோடு அவனைப் பார்த்தாள்.

ஒளிச்சிரிப்பு இழையோடும் இதழ்கள், பார்வை
ஊடுருவ ஆராயும் விழிகள், துன்பக்
கிளைவிட்டுப் படராத முகமும், அன்புக்
கனிவோடு உதிர்கின்ற பேச்சும் மீண்டும்
தளிர்ப்பதற்கும் தழைப்பதற்கும் இயன்றி டாமல்
துணையாக இருப்பவரைக் கலங்க வைத்துக்
கணைப்பாறி இயக்கமற்றுச் சடல மாகக்
கிடக்கின்ற அவனோடு புதைந்த தப்போ

முதிராத சிறுவயதில் துவங்கி கால
முன்னேற்ற தொடர்ச்சியிலே வளர்ந்து மென்மை
இதயத்தில் பிணைந்துவிட்ட அன்பு, சப்தம்
இடுகின்ற கடலாக ஆழம் கொண்டு
விதவிதமாய் முகில்பழகும் வானம் போன்று
விரிவடைந்து கிளைத்துவிட்ட உணர்வின்ஊற்று
அதிவிரைவில் மணற்குன்று இடிவ தைப்போல்
அழியாமல் நிலைத்திருக்கும் இமயக் கோடு.

மனிதமன உணர்வுகளின் செழுமை யோடு
மாற்றமின்றித் தன்னோடு பழகி வந்த
இனிமைமிகு உறவுதனைக் கத்த ரித்து
இறப்பினிலே சங்கமித்த அவனைக் கண்டு
தனக்குள்ளே நெக்குருகி அழுதாள். நீண்ட
திரையொன்று அவள்முன்னே விரியக் கண்டாள்
இனிவாழ்வின் வேறுபல காட்சி தம்மை
எவ்வாறு அருணுவால் ரசிக்கக் கூடும்?

பேராசி ரியைஅருணு. இருங்கோ வின்முன்
பாமரப்பெண் போல்மாறி அழுதாள். வந்து
நேருகின்ற துயரத்தின் முன்னுல் கல்வி
நெஞ்சமென்றல் உருகாதா என்ன? வட்ட
சூரியனை இழந்துவிட்டால் வானம் மட்டும்
சந்திப்ப தில்லைஇருளை, உலகங் கூட
காரிருட்டுக் கறையாகித் தீரும், வானக்
கதிர்மறைந்த சோகத்தைப் புலப்ப டுத்தும்.

அகலாமல் அவ்விரண்டு நெஞ்சக் காவில்
அழகார்ந்து புலர்ந்திட்ட அன்பை சற்றுத்
திகைப்போடும் பகையோடும் பிறழ்ந்து நோக்கித்
தடையாகி சூழ்நிலைகள் குறுக்கே நிற்க,
மிகத்துயரக் கனற்தகிப்பில் உள்ளம் வெந்தும்
மறப்பதற்கும் தவிர்ப்பதற்கும் இயன்றி டாத
அகப்பிணைப்பில் கட்டுண்டு தவித்த வாறு
அவ்விருவர் கண்ணீரால் இணைந்தே வாழ்ந்தார்

பிழையாகக் கணிப்பதற்குத் தயங்கி டாத
புரையோடி போய்விட்ட சமுதா யத்தில்
விழைவோடும் புனிதமிகு உணர்வி னோடும்
விரும்பிமனம் கலந்துவிட்ட அவர்கள் நேசம்
அழகாகப் பிறருக்குத் தெரிய வில்லை
அற்புதமாய்ப் பிரதிபலிப்பினில் இலங்க வில்லை;
எழுத்தறிவு இல்லாத மூட னுக்கு
இலக்கியங்கள் எவ்வாறு விளக்க மாகும்?

ஒருபெண்ணும் ஓர்ஆணும் மனங்க லந்து
உணர்வொன்றிப் பழகிவிட்டால் போதும் அந்த
அருள்உணர்வை இழிவான அளவு வைத்து
அளப்பதற்கே சமுதாயம் துடிக்கும், நெஞ்சில்
உருவாகும் அன்பிற்கு இதனை விட்டு
உயர்வான வேறெல்லை அமைப்ப தற்கு
விருப்பத்தைக் கொள்வதில்லை, அதற்கு மேலே
விவேகமொடு அதன்கணிப்பு உயர்வ தில்லை.

கடல்துறையில் சேர்வதுதான் நதியின் வாழ்வா;
கழனியிலே பாய்வதுவும் வாழ்க்கை யாகும்
மடலவிழும் பூக்களெல்லாம் கூந்த லைத்தான்
முத்தமிட வேண்டுமென்ற நியதி இல்லை
கடவுளரின் கோவிலிலே சூடப் பட்டுக்
கரம்தொழுவார் பக்தியிலும் கலப்ப துண்டு
அடுப்படியில் விறகாகி எரிந்தி டாமல்
அழகாகச் சிலையாகும் மரமும் உண்டு!

இடையூறு அபவாதம் எழுந்த போதும்
இருவருள்ளம் அதனாலே கலங்கி டாமல்
அடிப்படையில் ஒருசிறிதும் மாற்ற மின்றி
ஆர்வமுடன் பழகிவந்தார் பிரிவே இன்றி;
நெடுமலையா கரைந்துவிடும் பனிந னைத்து?
நிலாக்கதிரில் குளநீரா வற்றிப் போகும்?
தடைவிதித்தார் இருவருக்கும் அவர்கள் வீட்டில்
துளியேனும் விலகவில்லை இரண்டு நெஞ்சும்!

சதைஉடலின் கவர்ச்சியிலே அரும்பு கின்ற
சிற்றின்ப ஆசைகளோ சிலநாள் நெஞ்சில்
புதுச்சுவையைப் பரப்பிவைக்கும் மனம்பி ணிக்கும்
பிறகந்த இனிமைகளோ திகட்டிப் போகும்
விதவிதமாய் எரியும்மத் தாப்பு விட்டு
விளக்கைப்போல் ஒளிவழங்கி நிலைப்ப துண்டோ?
இதயத்தில் ஒன்றிநின்று புலரும் அன்போ
இல்லத்து விளக்காக ஒளிப ரப்பும்!

ஒருவரின்றி ஒருவரினுல் வாழ்வ தற்கு
உள்ளத்தில் வன்மைஇல்லை இருவருக்கும்.
பிரிந்துவிட்டால் ஒளிவிளக்கும் திரியும் தீப
பிரகாசம் எவ்வாறு திகழும் வீட்டில்?
விரலைவிட்டு மோதிரமோ நழுவிப் போகும்
வாய்ப்பேது நகம்விரலை விட்டுப் போக?
நெருப்பாகத் துயர்பற்றித் தகித்தபோதும்
நீறுகி அவர்அன்பு அழிய வில்லை!

குழந்தைக்கு நோய்வந்தால் தாய்ம ருத்தி
கடும்பத்தி யத்தோடு மருந்து உண்டாள்
எழுந்துவிட்ட நெருக்கடியை வீட்டில் போக்க
இல்லறத்து வாழ்க்கையினை ஏற்று, தொட்டுப்
பழகுதற்கு வேறொருத்தி கிடைத்த போதும்
புலன்வாழ்வில் இருங்கோவன் மூழ்கி, மோகச்
சழக்குற்றுப் போகாத நெஞ்சி னோடு
சத்தியமாப் பழகிவந்தான் அருணு வோடு

கண்ணீரோ அன்றிஎழும் சிரிப்போ, வாழ்வில்
காண்கின்ற எதையுமவன் அருணு வோடு
உண்மையிலே பரிமாறிக் கொள்வான்; அந்த
உவகையிலே ஆறுதலைப் பெறுவான். இன்றோ
கண்ணீரால் நனைகின்ற அருணு விற்குக்
களிவாக மொழிந்தேதும் தேற்றி டாமல்
மண்குழியின் வாழ்க்கையிலே விருப்ப முற்று
மண்வாழ்வை உதறிவிட்டு மறைந்தே போனுன்.

தன்மனத்தில் விம்முகின்ற நினைவி னுக்குத்
தாழிட்டுச் சடலத்தை அருணு பார்த்தாள்
"உன்மனத்தில் நிரந்தரமாய் வாழ்வ தற்கே
உனைவிட்டு மரணமொடு கலந்து போனேன்"
என்றவளின் மனத்திற்குச் சொல்வ தைப்போல்
இருங்கோவன் பிணமாகக் கிடந்தான்; ஆமாம்
இன்றிருந்த ஊனுடலம் அழிந்திட் டாலும்
எப்போதும் அவள்நெஞ்சில் அவன்இ ருப்பான்.

சூழ்ந்திருந்த எல்லோரும் இறுதி யாகச்
சோகமொடு சடலத்தின் அருகே வந்து
ஆழ்ந்ததுயர் அஞ்சலியைச் செலுத்தி விட்டு
அகன்ருர்கள் நீர்க்கோல விழிக ளோடு;
ஊழ்வினையால் எனைப்பிரிந்த உங்க ளுக்கு
உய்வாகப் பவித்திரமாய் என்னை யேநான்
தாழ்மையொடு நிவேதனமாய்ச் சமர்ப்பிக் கின்றேன்
தருவதற்கு இதையன்றி ஏதும் இல்லை.

காதலென்ற முடிவான எல்லை யைத்தான்
கட்டாயம் இவ்வுலகம் நிர்மா ணிக்கும்
மாதொருவள் ஆணிடத்தில் காட்டு கின்ற
மாசற்ற அன்பிற்கு, அதற்கப் பாலே
நூதனமாய் உயர்வதில்லை உலகப் பார்வை
நியதிஇது மாறுவதும் இல்லை. ஆனுல்
சாதனையாய் நமக்கிடையில் செழித்த அன்போ
சிற்றின்பக் கறைபடியா தூய்மை நோன்பு!

மனவேள்வி நமதன்பு. இச்சை யென்ற
மருள்படிந்து போகாத அருள்உ ணர்வு
நினைப்பளவில் வாழ்ந்திருந்த நமது வாழ்வோ
நீசமற்ற தவமாகும் பழக்க மாகும்
மனம்கவர்ந்த உமதன்பைத் தலைவ ணங்கி
மனப்பூர்வ மாய்த்தொழுது மதிக்கின் றேன்நான்
இனிமைமிகு ஞாபகமாய் உங்கள் அன்பே
எனதுயிரின் உணர்வெங்கும் கொலுவி ருக்கும்

இங்கிருந்து விடுபட்டு உம்மைத் தேடி
வரும்எனது உயிர்ப்பறவை, "தனித்த வாழ்வில்
குங்குமத்தின் பழக்கமற்ற நெற்றி யோடும்
குளிர்ந்தமலர் தொடர்பற்ற கூந்த லோடும்
தங்களை யே நினைத்தபடி நான்வாழ்ந் திட்ட
தனல்சேதி கொண்டுவரும்" என்ற வாறு
பொங்கியெழும் அழுகையொடு கூந்தல் பூவைப்
பறித்தெடுத்து அவனடியில் அருணு வைத்தாள்.

இதுவரைக்கும் அவனைவிட்டுத் தனியாய் எந்த
இடத்திற்கும் போகாத இருங்கோ, ஏனே
புதுப்பழக்கம் மேற்கொண்டு தனிமை யாகப்
புறப்பட்டுச் செல்கின்ருன்; வெறுமை சூழ்ந்த
இதயத்தைப் போல்இனிமேல் எனது நெற்றி
இருக்கட்டும் எனஅருணு நினைத்த வாறு
பதிந்திருந்த குங்குமத்தைத் துடைத்து விட்டுப்
படைத்திட்டாள் அஞ்சலியாய்க் கண்ணீர் பூக்கள்!

செய்திகளில் அடிக்கடித் தோன்றும் இந்தப் பிரச்சினையின் வடிவம்தான் என்ன?

நாகாலாந்து?

—வி. வி.—

“இந்தியாவின் வடக்கே சுவர் போல அமைந்திருக்கும் இமயமலை இயற்கைபாகவே நமக்குக்கிடைத்துள்ள பாதுகாப்புஅரண் ஆகும். இதைத் தாண்டி பகைவர்கள் நமது நாட்டில் நுழைவது முடியாத காரியம்” என்று சிறுவர்கள் பயிலும் வரலாற்று நூலிலே எழுதப்பட்டிருந்த பாடக் குறிப்புகள் இன்று பொய்யாகிவிட்டன. இன்று இமயமலைதான் நமது எல்லைக் காவலுக்கு பல தொல்லைகளை உற்பத்தி செய்யும் இயற்கை தரும் இன்னலாக அமைந்துள்ளது. நமது பகைவர்களான சீனர்களுக்குப் பழகிப்போன விளையாட்டு நிலமாக மாறிவிட்ட இந்த பனிபடர்ந்த மலையுச்சிப் பாசறைகள் நமக்கோ இன்னும் சிரமத்துடன் சமாளிக்க வேண்டிய பகுதிகளாகவே இருந்து வருகின்றன. இந்திய அரசுக்கு உட்பட்ட எல்லைப் பகுதிகளில் வாழும் மலைசாதி மக்களும் நமது போர்ப்படைகளுக்கு எதிராகக் கிளர்ச்சிகள் செய்வதற்கும் இயற்கை வசதி செய்து கொடுத்துள்ளது.

இன்று பகை நாகர்கள் நமது எல்லைப்புறக் காவல் படையினரை எதிர்பாராத விதமாகத் தாக்கியதால் பல வீரர்கள் காயமடைந்தனர்; சிலர் இறந்தனர் என்பனபோன்றசெய்திகள் அடிக்கடிவந்துகொண்டே இருக்கின்றன. சென்ற அக்டோபர் 31 அன்றுடு நாகர் புரட்சி இயக்கத்தினருடன் இந்தியஅரசுசெய்துகொண்ட போர்நிறுத்த உடன்பாடு முடிவடைகிறது. இது மேலும் மூன்று மாத காலம் நீடிக்கப்படுவதற்கு இந்திய அரசு ஒப்புக்கொள்கிறது. ஆனால் அதே சமயத்தில் நாகர்களின் தலைவர்கள் தங்களுக்கு வேண்டிய போர்த் தளவாடங்களைப் பெறவும் தங்கள் புரட்சிப் படையினர்க்கும் அவர்களுக்கு உதவியாக வந்துள்ள மிஜோ, குத்கிஸ், கச்சிம் பகுதி மலைசாதியினருக்கும் போர்ப் பயிற்சி அளிப்பதற்கும் உதவி பெறுவதற்காகப் பீகிங்நகரில் சீன கம்யூனிஸ்ட் தலைவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்திக்கொண்டிருக்கின்றனர் என்ற செய்திகளும் வருகின்றன.

போர் நிறுத்த ஒப்பந்தம் என்பதே எந்தச் சமயத்திலும் வெளிநாட்டு அரசு ஒன்றுடன்தான் செய்துகொள்வது வழக்கம். இந்த இடத்தில் மட்டும் இந்திய அரசு தனக்கு உட்பட்ட ஒரு மாநிலத்தின் தலைவர்களுடன் போர் நிறுத்த உடன்பாடு செய்துகொண்டிருக்கிறது. இது ஒரு விந்தையான குழப்பம். இதுபோல நாகாலாந்து பிரச்சினையிலே பல குழப்பங்கள் உண்டு. அவற்றையெல்லாம் நமது நாட்டின் மற்ற மாநிலங்களில் வாழும் மக்கள் புரிந்துகொள்வதற்கு வகையொன்றும் செய்யாமல் நமது பத்திரிகைகளும் நாகர்களின் வாழ்க்கை முறையைப்பற்றியும் மண வாழ்க்கையில் நிலவும் சில வேடிக்கையான வழக்கங்களைப் பற்றியும் ‘சுகவல்’ துண்டுகளை வெளியிடுவதோடு திருப்தியடைந்து விடுகின்றன. இவைகளினால் எல்லாம் நாகர்களைப் பற்றி சரியான உண்மைகள் மக்களுக்குக் கிடைக்காமல் போய்விடுகிறது.

முதலில் நாகர்கள் எல்லோரும் படிக்காத காட்டுமிராண்டிகள் அல்ல. அங்கே கல்லூரியில் படித்த ஆண்களும் பெண்களும் நிறைய இருக்கிறார்கள். புரட்சி இயக்கத்தை ஆங்கிலம் படித்த இளைஞர்கள் பலர் முன்னின்று நடத்தி வருகிறார்கள். ஆங்கிலமே அரசாங்க அலுவல்களுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும்,இந்தியாவுக்கு இணைப்பு மொழியாக ஆங்கிலமே இருக்க வேண்டும் என்றும் ஒரே குரலில் கூறும் மாநிலம் நாகாலாந்து ஒன்றுதான். இந்திய விடுதலைக்கு முன்னரே நாகர்கள் வாழும் இந்த மலைப் பகுதியில் கிறிஸ்தவ பாதிரிமார்கள் நுழைந்து அங்கே ஏசுநாதரின் மதத்தையும் ஆங்கில மொழியையும் வேரூன்றச் செய்துவிட்டதால் நாகாலாந்து நாட்டு அரசியலில் தேவாலயத்துக்கும், பாதிரிமார்களுக்கும் அதிக செல்வாக்கு ஏற்பட்டுவிட்டது.

முக்கால் பகுதி காடுகளும் மலைகளுமாகவே உள்ள நாகாலாந்தின் மொத்த நிலப்பரப்பு 6365 சதுர மைல்கள் ஆகும். கடல் மட்டத்திற்கு 2000 முதல் 8000 அடி வரை உயரத்தில் உள்ள இந்த நிலத்தில் 35 ஆயிரம் ஏக்கர் நிலம் தான் சமதளமாகவும் நிரந்தரமான விவசாயத்துக்கும் ஏற்றது. மற்ற 16 லட்சம் ஏக்கர் நிலத்தில் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை இடம் மாற்றும் முறையில் விவசாயம் நடைபெறுகிறது. ஒரு இடத்தில் இருக்கும் காடுகளை தீவைத்து எரிப்பார்கள். அந்த சாம்பலையே எருவாகக் கொண்டு ஐந்துஆண்டுகள் அங்கே பயிர்கள் விதைக்கப்படும். முதல் ஆண்டு அதிக விளைச்சல் இருக்கும். பிறகுபடிப்படியாகக்குறையும். ஐந்து ஆண்டுகள் ஆனவுடன் வேறு ஒரு காடு கொளுத்தப்பட்டு கழனியாக்கப்படும். முதலில் கைவிடப்பட்ட இடத்தில் காடு வளர ஆரம்பிக்கும். எட்டு ஆண்டுகள் கழித்து இந்தப் புதிய காடுகள் மறுபடியும் எரிக்கப்பட்டு கழனியாக்கப்படும். இப்படி இடம் மாறிக்கொண்டே போகும் விவசாய முறை நாகாலாந்தில் தவிர வேறு எங்கும் இருப்பதாகத் தெரியவில்லை. இந்த விவசாய முறையை ‘ஜூமிங்” என்று சொல்லுகிறார்கள்.

1947-ல் இந்தியா விடுதலை அடைந்த காலத்திலிருந்தே இந்திய அரசின் ஆணைக்கு ஒருமுகமாக உட்பட மறுத்து வருகிறார்கள் இந்த நாகர்கள். இந்திய ஆட்சிக்கு உட்படாத தனிநாடு வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி வருகிறார்கள். ஆரம்ப கட்டத்தில் நாகர்களின் தலைவன் பிசோ என்பவன் இந்த விடுதலைப் போரை நடத்தி வந்தான். இவனுக்கு ஆலோசகராகவும் இந்திய அரசுடன் பேசுவதற்கும் உலக நாடுகளின் கவனத்தை நாகர்களின் பிரச்சினைக்குத் திருப்புவதற்கும் தம்முடைய ஆற்றலையும் நற்பெயரையும் பணயம் வைத்துப் போராடியவர் மைகேல் ஸ்காட் என்ற மதகுரு ஆவார். முதலில் இந்திய அரசு இவர்களையும் இவர்கள் நாகர் நாட்டு மக்களிடம் பெற்றுள்ள செல்வாக்கையும் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. ஒரு கட்டத்தில் இவர்கள் இந்திய அரசுக்கு உட்பட்ட தனி மாநிலத்தை சில சிறப்புச் சலுகைகளுடன் பெற்றுக் கொள்ளத் தயாராக இருந்தனர். அப்போது நேருவின் செல்வாக்கிலேயே இறுமாந்து கிடந்த மத்திய அரசு இதற்கு இணங்கவில்லை.

இந்திய அரசு நாகர்களின் புரட்சியை சுலபத்தில் அடக்கிவிடலாம் என்று எண்ணியது தவறாகிவிட்டது. செய்திப் படங்களில் இந்திய ராணு

வத்தினருக்கு நாகர்களின் மத்தியில் எத்தகைய நல்ல வரவேற்பு என்பதைக் காட்ட போர் வீரர்கள் மலைசாதியினருடன் கைகோர்த்து நடனமாடும் காட்சிகள் இந்தியாவெங்கும் காட்டப்பட்டன. மலைசாதியினரில் வேறு வேறு இனத்தவர்கள் பிசோவின் தலைமையை ஏற்க மறுப்பதாக செய்திகள் வெளியிட்டனர். ஒரு குறிப்பிட்ட மலைசாதியினரின் தலைவி தன்னுடைய இனத்தாரை பிசோவிற்கு எதிராகக் கலகம் செய்யத் தூண்டிவிட்டு புரட்சி ஒன்றும் நடைபெறுவதாகச் சொன்னார்கள். இத்தனைக்குப் பிறகும் நமது ராணுவம் அங்கே நிலையான ஆட்சி ஒன்றை உருவாக்க முடியவில்லை.

இதற்கிடையில் நாகர்களின் புரட்சித் தலைவர்களுக்கும் இந்திய அரசின் வெளியுறவு இலாகா அதிகாரிகளுக்கும் நடந்துவந்த பேச்சு வார்த்தைகளில் மத்தியஸ்தர்களாக நின்று உதவி செய்வது என்ற நோக்கத்தில் ஒரு அமைதி தேடும் குழு (பீஸ் மிஷன்) ஒன்று தோன்றியது. அஸ்ஸாம் முதலமைச்சராக இருந்த சாலிஹா, மைக்கேல் ஸ்காட் பாதிரியார், ஜெயப்பிரகாஷ் நாராயணன் ஆகிய மூன்று பேரும் இந்த நடுவர் பொறுப்பை ஏற்றனர். பெயரளவுக்கு இவர்கள் நடுவர்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் இவர்களது பணி நாகர்களை சமாதானப்படுத்தி இந்திய அரசு ஏற்படுத்தும் திட்டப்படி டெல்லிக்கு உட்பட்ட மாநில அரசு ஒன்றை ஏற்கும்படி செய்ய வேண்டும் என்பதுதான். இதை ஒப்புக்கொண்டுதான் தங்கள் பணியைத் தொடங்கினர் இந்த நடுவர் குழுவினர். ஆனால் அடிக்கடி ஸ்காட் பாதிரியாரும், ஜெயப்பிரகாசரும் பேசிய பேச்சுக்கள் நாகர்களுக்காக வாதாடுவது போலவே அமைந்துவிட்டது.

இதற்குள் பிசோ வெளிநாடுகளுக்குச் சென்று உலகநாடுகளின் சபையில் தனது நாட்டின் விடுதலை பிரச்சினையை எழுப்ப முயற்சிகள் செய்தான். இதனால் ஆத்திரமடைந்த இந்திய அரசு அவனது இந்தியக் குடியுரிமையைரத்துசெய்து விட்டது. ஆனால் ஸ்காட் பாதிரியாரின் உதவியால் பிசோ ஒரு பிரிட்டிஷ் காமன்வெல்த் குடிமகன் என்ற முறையில் இங்கிலாந்து நாட்டில் குடியுரிமை வழங்கப்பட்டுவிட்டது. உலக நாடுகளில் இந்தப் பிரச்சினையை எழுப்புவதில் வெற்றி காணாத பிசோ லண்டனிலேயே தங்கியிருந்து தனது நாட்டின் விடுதலைப் போரை தொடர்ந்து நடத்தி வந்தான்.

இந்தியா திரும்பிய ஸ்காட் பாதிரியார் தொடர்ந்து நாகர்களின் பிரச்சினைகளுக்காக வாதாடி வந்தார். இதற்குள் அவரை நம்புவது தவறு அவரை இந்தியாவிலிருந்து வெளியேற்றவேண்டும் என்ற அரசியல் கோரிக்கைகள் நாடாளுமன்றத்தில் அடிக்கடி எழுப்பப்பட்டன.

தொடர்ந்து நடந்த பேச்சு வார்த்தைகளின் பயனாக அஸ்ஸாம் மாநிலத்திலிருந்து நாகர்கள் வாழும் மூன்று மாவட்டங்களைத் தனித் தனியாகப் பிரித்து அஸ்ஸாம் கவர்னரின் ஆளுகைக்கு உட்பட்ட தனி மாநிலம் 1963 டிசம்பர் முதல் நாளன்று தோற்றுவிக்கப்பட்டது. ஜனநாயக முறையில் தேர்தல்கள் நடந்தன. நாகர்களின் தேசியகட்சி என்றும், ஜனநாயகக்கட்சி என்றும் இரண்டு கட்சிகள் தேர்தலில் போட்டியிட்டன. கட்சிகள்தான் இரண்டே தவிர நாகர்களின் தனி நாடு கோரிக்கையில் இரு கட்சிகளின் கருத்தும் ஒன்றாகவே இருந்தது. இரண்டு கட்சிகளும் கிருஸ்தவ மதத்தலைமையின் ஆணைக்கு (நாகாலாண்ட் பாப்டிஸ்ட் சர்ச்) உட்பட்டவையே.

ஷிலு ஆவோ தலைமையில் அமைச்சரவை பதவி ஏற்றது. பிசோ காலத்தில் மறுக்கப்பட்ட இந்த உரிமை அவனது அனுமதியின்றி அவன் வெளிநாட்டிற்கு அகற்றப்பட்ட நிலையில் அவனது சாதியாருக்கு வழங்கப்பட்டது. இதனால் நாகர்கள் திருப்தியடையவில்லை. தாங்கள் இந்திய அரசுக்கு உட்பட்டு வாழ வேண்டிய அவசியமில்லை என்ற எண்ணத்தை முதலில் இந்திய அரசு கையாண்ட கடின போக்கு அவர்கள் மனதில் உண்டாக்கிவிட்டது. மற்ற மாநிலங்களுக்கும் தங்கள் நாட்டுக்கும் வேறுபாடு அதிகம் உண்டு என்பதற்கு அவர்கள் வரலாறறையே ஆதாரமாகக் காட்டுகின்றனர்.

"முதலாவதாக வெள்ளைக்காரன் இந்த நாட்டில் அடி எடுத்து வைப்பதற்கு முன்னால் நாங்கள் எந்த ஒரு நாட்டானுக்கும் அடிமைப் பட்டதில்லை. சுதந்திரமாகவே வாழ்ந்து வருகிறோம். அடுத்தபடியாக எங்கள் வாழ்க்கை முறைக்கும் பண்பாட்டிற்கும் மற்ற இந்திய பகுதிகளுக்கும் ஒரு தொடர்பும் இல்லை. இந்தியாவோடு எந்த காலத்திலும் நாங்கள் ஒன்றுபட்டு வாழ்ந்தது கிடையாது" என்பது அவர்கள் வாதம். "இந்தியாவை விட்டுச் சென்ற வெள்ளைக்காரர்கள் அதே நேரத்தில் நாகர்களின் நிலத்தையும் விட்டுவிட்டார்கள். அதன் பிறகு இந்திய ராணுவம் எங்களை தோற்கச் செய்து எங்கள் நாட்டை இந்தியாவுடன் இணைக்க விரும்பியது. நாங்கள் எங்கள் ரத்தத்தை சிந்தி இந்திய ராணுவத்தின் இந்த முயற்சியைக் குலைத்து வருகிறோம். வெள்ளைக்காரன் எங்களை இந்திய ஆட்சியாளர்களின் பொறுப்பில் விட்டுச் செல்லவில்லை" என்று கூறுகிறார்கள் நாகாலாந்து விடுதலை வீரர்கள்.

இந்திய அரசுக்கு உட்பட்ட மாநில ஆட்சி அங்கே தொடர்ந்து நடைபெறுகிறது. ஷிலு ஆவோ போய் இப்போது அங்காமி என்ற முதலமைச்சரின் தலைமையில் ஆட்சி நடக்கிறது. தொடர்ந்து நாகாலாந்து பிரச்சினை டெல்லியில் விவாதிக்கப்பட்டுக்கொண்டிருந்தது இதற்

வாய்வு சூரணம்
மலச்சிக்கல் மலக்கட்டு, பித்த உஷ்ண வாய்வு. கை கால், இடுப்பு மூட்டுகள் வலி பிடிப்பு, செரியாமை, வயிற்று வலிக்குச் சிறந்தது.
160 கிராம் டின் ரூ. 4—00

பூபதி எண்ணை
இருமல், இளைப்பு, ஏங்கல், குத்தல், வரட்டு, புகைச்சல், இருமல், மழைப் பனிக் காலங்களில் வரும் இரைப்பு. மேல் மூச்சு, குணம் செய்யவல்லது.
புட்டி ரூ 7—50

கக்குவான் மருந்து
முதல் நாளிலேயே கக்குவான் கிருமிகளை வெளிப்படுத்தி நோயைக் கட்டுப்படுத்தி விரைவில் குணம் செய்யவல்லது.
புட்டி ரூ. 2—00

வீரகேசரி மாத்திரை
ஜீவசக்தி கனவிலும், சிறுநீரிலும் வெளியாவதை கட்டுப்படுத்தும் நாடி நரம்புகளுக்கு வலுவும் உறுப்புகளுக்கு உறுதியும் இழந்த சக்தியும் நீடித்த சக்தியும் அளிக்கும்.
100 பில்ஸ் ரூ. 25 50—ரூ. 13, 24—ரூ. 7.

S V R சூரணம் K. I M P வாய்வுசூரணம் டிப்போ
தம்மண்ண செட்டியார் ரோடு, அரிசிப்பாளையம், சேலம்-9

அமிர்தபால் அண்ட் கோ., 146 நைனியப்ப நாய்க்கன் தெரு, சென்னை-3
ராஜா மெடிகல் ஹால், 31, தர்மராஜா கோயில் தெரு, பெங்களூர்- (கண்ட்)
ஸ்ரீ. வல்லராம நாடார் அண்ட் சன்ஸ். 188-எ தாராவி ரோடு. பம்பாய்-17,
சொக்கலிங்கம் செட்டியார், மருந்துக் கடை திருப்பாபுலியூர், கடலூர் என், டி,
ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி, சிலோன்.

குறைகளைப் பேசினோம்; களைந்தோமில்லை!

7-ம் பக்கத் தொடர்ச்சி

டிய நான் அதை மறந்து அமரத்துவம் வேண்டினேனே' என்று வருந்தினாள்.

இந்த நாட்டில் வாழ்கின்ற நாம் அத்தகைய நிலைமையில்தான் இருக்கிறோம். நம்முடைய நாகரிகம் பண்பாடு ஆகியவற்றுக்குப் புத்துயிரும் புதுப்பொலிவும் ஊட்ட வேண்டியவர்களாக இருக்கிறோம்.

நெடுங்காலமாகப் பழைய முறைகளிலேயே ஊறி அவற்றைத் தாங்கி நின்று அவற்றுக் கெதிரான வாதங்களுக்கு எதிர்ப்புக் கூறிக் காலத்தைக் கழித்திருக்கிறோம்.

இதே காலத்தில் உலகத்தின் ஏனைய நாட்டவரெல்லாம் உண்மையை நாடிப் பொறுமையோடு தங்களது இடைவிடா சோதனை மூலம் பல புதிய முடிவுகளை எய்தி பல புதிய உயர்வுகளை அடைந்துள்ளனர்.

நாமோ பண்டைப் பழம் பெருமையினிடத்தில் — இடிந்து கிடக்கும் கோட்டை கொத்தளங்கள் ஓரத்தில் —அமர்ந்திருப்பதிலேயே திருப்தி கொள்கிறோம். நமக்கென்று வாய்த்த சமய சாத்திரமெல்லாம் வெறும் சடங்குகள் என்கிற நிலைக்குச் சீரழிந்துவிட்டன. வர்க்கபேதமற்ற—சாதி பேதமற்ற — சமுதாயமாக இருந்த நமது சமுதாயம் இன்று சாதி, இன–வேறுபாடுகளால் கூனிக் குறுகி சிறுசிறு அமைப்புக்களாகக்கட்டப்பெற்றுள்ளது.

மூடப் பழக்க வழக்கங்களைக் காணுமிடத்தில் நம்மில் பலர் வாய்மூடி மௌனிகளாக இருக்கிறோம். சிலர் சாத்திரம்பேசி அவற்றைச் சமாளிக்கப் பார்க்கிறோம். இவற்றுக்கெதிரான கண்டனங்கள்— எதிர்ப்புக்கள் தோன்றியிருந்தும் கூட நம்மையறியாமல் நாம் இவற்றைப் பாதுகாக்கக் கூடியவர்களாக இருந்து வந்திருக்கிறோம்.

இக்கொடுந் தீமைகளை எதிர்த்துப் போராட தீரமிக்க வீரர்கள் தோன்றியபோதெல்லாம் அவர்கள் உன்னதமான கருத்துக்களையும்—புனிதமான கொள்கைகளையும் ஒழிக்க வந்தவர்களென்று குறைகூறி வந்துள்ளோம். இந்த நிலைமைகளுக்கெதிராக வெறுப்படைந்து கோபமடைந்த சமுதாயத்தின் கணிசமான பகுதியினரைத்தான் பெரியார் இராமசாமி பிரதிநிதித்துவப்படுத்தி அந்தக் கோபத்தின் விரக்தியின் சின்னமாக விளங்குகிறார்.

உள்ள வாழ்க்கை முறையைச் சீரழியவிட்டுவிட்டு பகுத்தறிவாளர்களுக்கெதிராகக் குறை கூறுவது மென்மேலும் மூடநம்பிக்கைகள் வளரவும் இந்தச் சமுதாயம் சீரழியவுமே துணைபுரிவதாகும்.

சமுதாயத்தினைச் சீரமைக்கும் பணியில் ஈடுபடவேண்டும். நீண்ட காலமாகவே இப்பணி செய்யப்படாமல் உள்ளது. பல்கலைக் கழகத்தில் தேர்ச்சிபெற்று பட்டதாரிகளாகி வெளியேறுவோர் அப்பணிக்குரிய தூதுவர்களாக நான் கருதுகிறேன். பல்கலைக் கழகங்களில் சமுதாயச் சீரமைப்புக் குறித்த சிக்கலான விஷயங்கள் திறந்த மனதோடு—முழுமையாகவும் விவாதிக்க வாய்ப்பிருக்கின்றது.

கண்ணியமிக்க பரம்பரையின் வழித் தோன்றல்களாகிய நீங்கள்தான் இந்த உன்னதமான பணிக்கு மிகவும் பொருத்தமானவர்கள். இந்தப் பணியில் நீங்கள் காணும் வெற்றியில்தான் இந்த நாட்டின் எதிர்காலமே இருக்கிறது.

இப்பல்கலைக் கழகம்போன்ற அறிவாலயங்கள் மக்களை முன்னேற்றப்பாதையில் இட்டுச்செல்வதாக இருக்க வேண்டுமென்று மக்கள் நினைக்கிறார்கள்!

அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பட்டதாரிகளே! ஜனநாயகத்தோடு ஒட்டி வாழ முடியாத சாதிமுறையை எதிர்த்துப் போர் தொடுத்திடுங்கள் என நான் உங்களை அழைக்கிறேன். விஞ்ஞானத்தோடு ஒட்டி வாழ முடியாத மூடப்பழக்க வழக்கங்களுக்கு எதிராகவும் சுதந்திரம் — சமத்துவம்—சகோதரத்துவம் ஆகியவற்றோடு ஒட்டி வாழ முடியாத பல்வேறு கோணங்களில் அமைந்த கொடுமைகளுக்கெதிராகவும் போர்தொடுத்திடுமாறு உங்களை நான் அழைக்கிறேன்.

(அண்ணாமலைநகர் பட்டமளிப்பு விழாக் கூட்டத்தில்)

குள் ஸ்காட்பாதிரியாரின் மீதும் ஜெயப்பிரகாசரின் மீதும் கலகத்திற்கே காரணம் இவர்கள்தான் என்ற குற்றச்சாட்டு நாளுக்குநாள் வலுவடைந்து வந்தது. "ஸ்காட் பாதிரியார் அமைதி ஏற்படுத்தியது போதும், இனி அவர் தமது தாயகத்துக்குத் திரும்பிவிடுவதுதான் நல்லது" என்று அவரை இந்தியாவிலிருந்து வெளியேற்றி விட்டது இந்திய அரசு. ஜெயப்பிரகாசரும் தாம் தொட்ட பணியில் எதையும் கடைசிவரை முழுசாக செய்ததில்லை என்ற பெருமைக்கிணங்க இங்கேயும் தமது சமாதானத் தூதுவர் பொறுப்பிலிருந்து விலகிக்கொண்டார்.

இப்போதும் ஜெயப்பிரகாசர் கூறுகிறார். "நாகர்களின் விடுதலை வேட்கையை சரிப்படுத்தும் வகையில் இந்திய அரசியல் சட்டத்தை மாற்றியமைப்பது அப்படியொன்றும் செய்ய முடியாத காரியமல்ல" என்று இந்திய அரசு நாகர்களின் தலைவர்களுடன் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்திக்கொண்டுதான் இருக்கிறது. 1963 டிசம்பரிலேயே மற்ற மாநிலங்களுக்குச் சமமாக உரிமைகளைப் பெற்ற பின்னும் பேச்சு வார்த்தைகள் என்றால் என்ன அர்த்தம்? மற்ற மாநிலங்களைவிட அதிகப்படியான சிறப்பு அதிகாரங்களை நாகாலாந்து மாநிலத்திற்கு கொடுப்பதற்கு இன்றில்லாவிட்டாலும் நாளை இந்திய அரசு தயாராகலாம் என்பதுதானே?

1947-ல் வழங்க விரும்பாத தனி மாநிலக் கோரிக்கையை 1963-ல் காலங்கடந்து வழங்கிய காரணத்தால்தான் தனிமாநிலக் கோரிக்கை காலப் போக்கில் தனிநாட்டுக் கோரிக்கையாக வளர்ந்து பலப்பட்டு விட்டது என்று கூறுகின்றனர் அரசியல் பார்வையாளர்கள்.

எல்லைக் காவலுக்கு மிகவும் முக்கியமான நிலப் பகுதியாகவுள்ள இந்த மலைநாட்டின் எதிர்காலம் எப்படி உருவாகப்போகிறது என்பது இனிமேல்தான் தெரிய வேண்டும்.

'முத்தாரம்''

திருவாளர் பிரபலம்!

திருவாரூர் முத்துராமன்

கீழ்மட்டத்திலிருந்து. மேல்தட்டுக்குச் செல்கின்ற வழியில் பெறுகின்ற பட்டறிவை, அல்லது ஒன்றிலிருந்து மற்றொன்றுக்குத் தாவுகிறபோது புரிந்துகொள்கின்ற பட்டறிவைத்தான் அனுபவம் என்று சொல்வார்கள்.

அந்த அனுபவத்தை இன்னின்ன முறைகளில்தான் பெறமுடியும் என்பதைத் திட்டவட்டமாக விளக்கிவிடமுடியாது. சந்தர்ப்பச் சூழ்நிலைகள் சிலருக்கு அந்த வழியைக் காட்டும். நெருக்கடிகள் சிலபேரை அந்த பாதையில் கொண்டுபோய்ச் சேர்க்கும்.

ஆனால், திருவாளர் பிரபலத்தின் அனுபவமோ இதற்கு முற்றிலும் மாறுபட்டதாயிருந்தது. சிந்தனைகள் கூட புறம்பாய்த்தானிருந்தன! காரும் பங்களாவும் வைத்துக்கொண்டிருந்த காலத்தில் ஏற்பட்ட சிந்தனைகள் வேறு; அவையெல்லாம்? தொலைந்து பாதசாரியாய் ஆகிவிட்டபோது எழுகின்ற சிந்தனைகள் வேறு என்பதைக்கூட பிரபலம் இப்போது ஒப்புக்கொள்கிறார்.

காலை 10-மணி இருக்கும். பிள்ளைப்பாளையத்திலிருந்து வள்ளல் பச்சையப்பர் சாலையைக் கடந்து காந்தி வீதியில் வந்துகொண்டிருந்தார் திருவாளர் பிரபலம்.

'பிள்ளையார் பாளையம்' என்பது எவ்வளவு அழகாக இருக்கிறது! எதற்காக இதனைச் சுருக்கி பிள்ளைப் பாளையம் என்கிறார்களோ தெரியவில்லையே! எதனையும் சுருக்கிச் சுருக்கி தங்களையே, தங்கள் இனத்தையே சுருக்கிக்கொண்ட தமிழர்கள் தம்பெயரை, தெருவின் பெயரை, ஊரின் பெயரை, மாவட்டத்தின் பெயரையேகூட சுருக்கிக் கொண்டிருக்கிறார்கள்! இந்நிலையில் தானாகவே தங்கள் நலமும் வளமும் சுருங்கத்தானே செய்யும்?' — என்ற ரீதியில் அவரது சிந்தனை சென்றிருந்தால், அவர் தமது நிலையிலிருந்து மாறுபட்ட வகையில் சிந்திக்கிறார் என்று பொருள்கொள்ள முடியும்.

அப்படி இல்லாமல், 'காஞ்சிபுரம்' என்பதனை ஏன் 'காஞ்சி' என்று சுருக்கிக்கொண்டார்கள் என்றோ, காஞ்சி என்ற சொல்லுக்கு வெற்றிமாலை என்ற பொருளோடு, பெண்கள் அணிகின்ற ஒருவகை மறை ஆபரணம் என்ற பொருளுமிருப்பதாகக் கலிங்கத்துப் பரணி கூறுகிறதே என்றோகூட அவர் அப்போது சிந்தனை செய்துகொண்டிருக்கவில்லை. இப்படியெல்லாம் சிந்தனை செய்கின்ற அளவுக்கு திருவாளர் பிரபலத்துக்கு ஆழ்ந்த இலக்கியப் புலமை — தப்பு, தப்பு அறிவுடைமை இருப்பதாகவோகூட யாரும் அவரை சொல்லமாட்டார்கள்!

திருவாளர் பிரபலம் பிரபலமாக இருந்தக் காலத்துச் சிந்தனைகள் சில இன்னமும் மக்காமல் மடியாமல் இருந்தன என்றாலும் ஒரே வினையின்மீதான அன்றைய அனுபவத்துக்கும் இன்றைய அனுபவத்திற்கும் காணப்படுகின்ற வேறுபாடு அவருக்கு நன்கு புரிந்தது.

காந்திசாலையைத் தொட்டு. நடந்துவந்துகொண்டிருந்தார் அவர்.

'ஏய், ஏய்'' என்று குரல்கொடுத்துக்கொண்டே அவரைத் தாண்டி ஒரு குதிரை வண்டி கடந்தது. ஐந்தாறுமொட்டைகள் அதனுள் திணிக்கப்பட்டிருந்தன.

மாடல் மாடலான கார்களில் பயணம் செய்துக்கொண்டிருந்த காலத்திலும் இத்தகைய மொட்டைகளை அவர் கண்டிருக்கிறார்! அப்போதும் அதுபற்றிச் சிந்தித்ததில்லை. இப்போதும் அவைகளைப்பற்றி நினைக்கவில்லை.

'ஏய் ஏய்' என்று குரல்கொடுத்துச் சென்ற வண்டிக்காரனைப் பற்றிய நினைவுதான் கப்பென்று கப்பிக்கொண்டது.

'எவ்வளவு திமிர் இருக்கவேண்டும் இவனுக்கு?—வண்டி ஓட்ட வந்துவிட்டால், சாலையில் நடப்போர் எல்லாரையும், 'ஏய், ஏய்' என்று விளிப்பது? கேட்டால், 'நான் உன்னையாப்பா சொன்னேன் —குதிரையை அல்லவா!' என்பான் சொல்லிவிட்டு மறுபடியும் இரண்டு 'ஏய் ஏய்'களைப் போடுவான். கேட்பார் இல்லை—திமிர் அதிகமாகிவிட்டது இதுகளுக்கு''—என்ற ரீதியில் அவரது சிந்தனை சென்றுகொண்டிருந்தது.

''என்ன சார்! பலத்தயோசனையிலே போய்க்கிட்டிருக்காப்போலெ இருக்கு!'' என்ற குரல்கேட்டு நின்றார் பிரபலம். பக்கவாட்டிலிருந்து அவரது பழைய நண்பர் பரமசிவம் வெற்றிலைக் காவி படிந்த பொக்கும் போறையுமான பற்களைக் காட்டி 'இ இ' என்று இளித்தபடியே வந்து கொண்டிருந்தார்.

''ஒண்ணுமில்லே பரமசிவம்! இந்த வண்டிக்காரன்களைப்பத்திதான் யோசிச்சிக்கிட்டே போறேன்! கொஞ்சம்கூட மரியாதையே இல்லே! ஆள் தராதரம்கூட புரியாமே, சும்மா, 'ஏய் ஏய்'ன்னு கத்திக்கிட்டே போறான்''

என்றார் சலித்துக்கொண்டபடி.

'ஓகோ! அதுதானு சேதி! நெசந்தான் சார்! இங்கெ மட்டும்ன்னு நெனைக்காதீங்கசார்! ஒவ்வொரு ஊர்லெயும் இப்படித்தான் இருக்கு. குதிரைவண்டிக்காரங்க மட்டும் இல்லே — மாட்டுவண்டியும் அப்படித்தான். கொஞ்சம் முறைச்சிப்பார்த்தா-ஏய் ஏய்மாறி, 'ஹேய், ஹேய்' ஆகும். கொஞ்சந்தாண்டிப் போனதும் மறுபடியும் ஏய் ஏய்தான்! மரியாதையே இல்லேசார் இந்தமாதிரி ஆளுங்களுக்கு—'' என்று பரமசிவமும், திருவாளர் பிரபலத்துடன் சேர்ந்து ஒத்து ஊதத் தொடங்கினார்.

''சின்ன மனுஷன்—பெரிய மனுஷன்னு வித்தியாசம் தெரியவாண்டாம்?''

'அது எப்படிசார் தெரியும்! அது தெரிஞ்சா வண்டியா ஓட்ட வருவாங்க? ஏரோப்ளேன் ஓட்டப் போயிடமாட்டாங்க.....நேத்து பாருங்க! பட்டணத்துக்குப் போயிருந்தேன்! குதிரைவண்டித் தொல்லை அங்கெ அப்படி ஒண்ணும் அதிகமில்லே. பதிலுக்கு ரிக்ஷாவும். சைக்கிள் ரிக்ஷாவும் இருக்கு. நம்மால எங்கெ டாக்ஸி வச்சிக்கிட்டுப் போக முடியுது? நடராஜா சர்வீஸ்தான்! இவங்களோடெ ஏய் ஏய் கூப்பாடுதான் போங்க''

என்று தன்து அனுபவத்தைச் சொல்லத் தொடங்கினுர் அவர்.

'எங்கெ இப்படி காலங்காத்தாலே கிளம்பிட்டீங்க? மார்க் கெட்டுக்கா?''
என்ருர் பிரபலம்.

'நீங்க ஒண்ணுசார்! அதுக்கெல்லாம்தான் ஆள் புடிச்சி இருக்கேனே! கமிஷன்கிமிஷன்னு எடுத்துக்கிட்டதுபோக — ஏதாச்சும் நிச்சயம் வந்துசேரும். அது போகட்டும். பொழுதுபோகலே —சும்மா இப்படி......';
ஏன்ருர் பரமசிவம்.

''சரி, சரி! நம்ம லிஸ்ட்தான்! வாங்களேன் கிளப் பக்கம் போயிட்டு வரலாம்......''

''போனுப்போச்சு...''
என்று அவரே முதலடி எடுத்து வைக்கத் தொடங்கினுர். அவரைத் தொடர்ந்தார் பிரபலம்.

''என் அனுபவத்தை வச்சி சொல்றேன் பரமசிவம்! இந்த வண்டிக் காரங்களேப்பத்திச் சொன்னேன்லியா! இந்த 'ஏய் ஏய்' பழக்கம் இன்னைக்கு நேத்து ஏற்பட்டதுஇல்லே. காலகாலமா அவங்க உடம்பிலேயே ஊறிப் போய்தான் இருக்கு. கார்லே போய்க்கிட்டிருந்ததாலே அப்போ அதெல்லாம் எனக்குத் தெரியலே!கால்நடையில்லே இப்போ! தானு புரியுது. எந்த ஒரு அனுபவமும், அந்தந்த எடத்துக்கு வர்ரப்போதான் அந்தந்த வழியிலே பிடிபடும் இல்லியா!''

''சரியாச் சொன்னிங்கபோங்க! கார்லே போறவுங்களுக்கு சைக்கிள்லே போறவங்க மேலே எரிச்சல்! சைக்கிள்ளே போறவுங்களுக்கு நடந்துப் போறவுங்க மேலே எரிச்சல், நடந்துப் போறவுங்களுக்கு......''

'நடந்துப் போறவுங்களுக்கு வாகனங்க மேலெ எரிச்சல்ன்னு சொல்லவர்ரே! அது சரிதான்! ஆனு நடந்து போறவுங்களும் கொஞ்சம் யோசிச்சுப் பார்த்து நடக்கணுமில்லே எந்தக் கோட்டையை எந்தப் பக்கத்திலே இருந்து தாக்கலாம்? எந்த வியாபாரத்தை செஞ்சா ஏழு நாச்லே எட்டு லட்சம் தேத்தலாம்னுலே யோசிச்சுக்கிட்டே நடக்குருங்க பரமசிவம்.''

''ஒரு வகையிலே சரிதான்சார்! ஆனு, வயித்துப் பொழைப்பு இருக்கே யோசிச்சுத்தானே தீரணும்? அதுக்குக்கூட மேஜை நாற்காலி போட்டுக்கிட்டு யோசிச்சுக்கிட்டிருக்க முடியுமா''

''நான் அதைச் சொல்லலே பரமசிவம்......''

''விடுங்க சார்! அதோ கிளப் வந்தாச்சு''

என்று சுட்டிக்காட்டினுர் பரமசிவம். திருவாளர் பிரபலம் தான் சொல்ல வந்ததை விழுங்கிவிட்டு உள்ளே எட்டிப் பார்த்தார்!

மூதாதையர் சேர்த்துவைத்த ஆஸ்தி பாஸ்திகளை எப்படி எப்படி எல்லாம் செலவு செய்து காட்ட முடியும் என்ற சிந்தனையில் ஆழமாக ஈடுபட்டவாறு பலராமன் மேஜையின் அருகே அமர்ந்திருந்தான். எதிரே ஒரு சீட்டுக்கட்டு வைக்கப்பட்டிருந்தது. அருகில் உயர்ந்த வகை சிகரெட்டான 555 டின் ஒன்றும் தீப்பெட்டியும் அனுதையாகக் கிடந்தன. சகலரோக நிவாரணியான சிகரெட்டின் மீது கூட அவன் எண்ணம் பாவவில்லை. எதிரேகிடந்த சீட்டுக்கட்டை வெறிக்கப் பார்த்தபடியே அமர்ந்திருந்தான் அவன்.

பெரிய இடத்துப் பிள்ளை. பெரிய பெரிய காரியங்களிலெல்லாம் காலத்தையும் காசையும் செலவிடுவதுதானே கண்ணியம்! அந்த கண்ணியத்தைக் காத்து ரட்சிக்கும் கடமையில் ஈடுபடத்தான் அன்றும் அங்கே வந்து ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபட்டிருந்தான்.

அவனுக்கு எதிரில் வந்து அமர்ந்தனர் திருவாளர் பிரபலமும் பரமசிவமும். வண்டிக்காரன் தன்னை 'ஏய் ஏய்' என்று அழைத்துவிட்டானே என்பதால் விகாரப்பட்ட முகப்பொலிவு திருவாளர் பிரபலத்துக்கு அப்படியேஇருந்தது. அதற்கு மாருக, பலராமனது சிந்தனை ஏன் அந்த சீட்டுக்கட்டின்மீதே குத்திட்டிருக்கிறது என்பதுபற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டார் பரமசிவம்.

பலராமனின் நண்பன் டகுனி வாசலில் நின்றபடியே அந்தக் காட்சியைப் பார்த்து ரசித்துஃகொண்டிருந்தான். காணுதவொரு காட்சியைக் கண்டுவிட்டதுபோன்ற ஒரு மகிழ்ச்சிப்பெருக்கில் பிரபலத்துக்கும், பரமசிவத்துக்கும் இடையே வந்து அமர்ந்தார் கிளப் செபலாளர் சிங்காரவேலு.

செயலாளர் சிங்காரவேலுவை யாரும் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. பொறுத்துப் பொறுத்துப் பார்த்துவிட்டு அவரே பேச்சைத் தொடங்கினுர்.

''என்ன மிஸ்டர் பிரபலம்! என்ன டல்லா இருக்கீங்க! உடம்புக்கு ஏதாவது......''

'ஊகூம் அதெல்லாம் ஒண்ணுமில்லே. நீங்க வந்ததை கானிக்கலே அவ்வளவுதான்!''

“அப்படித் தெரியலியே! பேயறைஞ்ச மாதிரி இருக்கே முகம்! ஏதாவது எலெக்ஷன் கனவு கினவு கண்டீங்களா என்ன?”

இப்போது பரமசிவம் குறுக்கிட்டார்:

‘இதோ பாருங்க மிஸ்டர் சிங்காரவேலு! உங்களுக்கு எத்தனை போதரம் சொல்லி இருக்கிறேன்! திருவாளர் பிரபலம் சார் கிட்டெ மறந்துகூட எலெக்ஷனைப்பற்றிப் பேச்சை எடுத்துடாதீங்கன்னு! என்னமோ உங்க நல்லகாலம்......அவர் மனசு சரி இல்லே. உங்க கேள்வி அவருக்குப் பிடிபடாததிஞலே, நீங்க இப்ப பொழைச்சிங்க...’’

என்ருர் சிரித்துக்கொண்டே. பிரபலம், பரமசிவத்தின் மறுப்பை ஆதரிப்பவரைப்போல, அவரது முதுகில் தட்டிக்கொடுத்து ‘‘ஒரு வகையிலெ நீங்க சொல்றது சரிதான் பரமசிவம்! என் மனசு இன்னமும் அந்த வண்டிக்காரனைச் சுத்தியேதான் நிற்குது! இந்த எலெக்ஷன்னு ஒண்ணைக் கண்டுபிடிச்சு, அதுக்குக் ‘கேண்டிடேட்’டுன்னு கொஞ்சம் பேரையும் தயார்பண்ணுன புண்ணியபுருஷனை விட, அந்த வண்டிக்காரன் எவ்வளவோ நல்லவன் இல்லியா?’’ என்று முடித்தார்!

பரமசிவம் அதிர்ந்துதான்போஞர். பலராமனும் கலந்துகொண்டு தன் கருத்தைக் கொட்டிஞன்!

‘‘அதுசரி பிரபலம்சார்! எலெக்ஷனைப்பத்தி நீங்க சொல்றது எனக்குப் புரியுது! வண்டிக்காரன் அப்படி இப்படிங்கிறது...’’

பலராமன் முடிக்கும்முன் பரமசிவமே அதை முடித்துவைத்தார்:

‘இதுலே புரியாதது என்ன இருக்கு மிஸ்டர் பலராம்! இந்த வண்டிக்காரங்க போக்கைப்பத்திக்கொஞ்சம் நெனைச்சுப்பாருங்க புரியும். ஓகோ! நீங்க பாதசாரி இல்லே இல்லே! உங்களுக்குப் புரியறது கொஞ்சம் கஷ்டந்தான். மூணு வருஷத்துக்கு முந்திவரைக்கும் நம்ம பிரபலம் சாருக்குக்கூடத்தான் இதெல்லாம் புரியாமெ இருந்தது. பலராம், கீழ் மட்டத்திலே இருந்து மேல்மட்டத்துக்குப்போறது ஒருவகை அனுபவம்; மேல் மட்டத்திலே இருந்து கீழ்மட்டத்துக்கு இறங்குறது ஒருவகை அனுபவம். கீழ்மட்டத்திலேயே இருந்துக்கிட்டு கீழ் மட்ட நிலைமையையும் மேல்மட்ட நிலைமைகளையும் புரிஞ்சிக்கிறது ஒருவகை அனுபவம்; மேல்மட்டத்திலே இருந்துக்கிட்டு மேல், கீழ்மட்ட நிலைமைகளை எல்லாம் தெரிஞ்சுக்கிறது ஒருவகை அனுபவம். ஒரே விஷயத்திலே இந்த அனுபவம், ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொருவிதமாகும்! உங்களையே எடுத்துக்குங்க. வர்ர எலெக்ஷன்லே, இந்தத் தொகுதிக்கு ‘கேண்டிடேட்’டா உங்க பேரு அடிபடுது. உங்க அப்பாவும் பாங்க் அக்கவுண்டை உசத்திக்கிட்டே போயிட்டிருக்காரு. இந்த நிலைமையிலே எலெக்ஷன்ஞ—உங்களுக்குப் புரியறது வேறெமாதிரியா இருக்கும். ஆஞ பிரபலம் சாருக்குப் புரிஞ்சி இருக்கிறது வேறமாதிரியா இருக்கும். அதுஞலதான் எலெக்ஷன்லெ நின்னு பேர் எடுக்கிறதைக் காட்டிலும் ஒரு வண்டிக்காரன் ‘ஏய் ஏய்’ன்னு மரியாதைக் குறைவாகத்திக்கிட்டுப் போறது அவ்வளவு ஒண்ணும் மானக் குறைவு இல்லே’ன்னு பிரபலம் சார் நினைக்கிருர். ‘‘ஏன் சார்! அப்படித்தானே?’’

என்று பிரசங்கத்தை நிறுத்திக் கொண்டார் பரமசிவம்.

‘‘புரியுது புரியுது! மூனு தடவை எலெக்ஷன்லே நின்னு முக்காடு போட்டுக்கிட்டவராச்சே நம்ம பிரபலம் சார்! சரிதான்! சரிதான்!’’

புரிந்து கொண்ட பாவனையில் தலையை ஆட்டிஞன் பலராமன்.

‘‘என்ன சரிதான் மிஸ்டர் பலராம்! புரிஞ்சிக்கிட்ட மாதிரி தலையை ஆட்டிஞ சரியாப் போச்சா? ஏன் பிரபலம்சார்! தேர்தல்லே உங்களுக்கு இருக்கிற அனுபவம் என்ன கொஞ்சமா நஞ்சலா? மூனு தடவைதான் நின்னீங்க! 100-ஏகர் நிலத்திலே 75-ஏகர்தான் மிச்சம்! ரோல்ஸ் ராய்ஸ்கார்போய், சும்மா பாண்டியாக் போதும்னு வந்திங்க! ரெண்டாந்தடவை நின்னதுக்கு அப்புறம் 25-ஏகர் நிலம்தான் மீதி! பாண்டியாக்கு உங்களை போண்டியாக்கிட்டுது. வெறும் அம்பாசிடரே போதும்ன்னு வந்திட்டிங்க! மூணும்தடவை பியட்தான் மிச்சம்! ஏகர் எல்லாம் ஏலத்திலே போச்சு! கொஞ்சநஞ்சமிருந்த வீட்டை மாட்டை வித்து சோறு கெடைச்சாப் போதும்னு ஆகிட்டிங்க. இந்த அனுபவம் என்ன சாமான்யமா ஒருத்தருக்குக் கிடைக்குமா? மிஸ்டர் பலராம்! இந்த தடவை நீங்க நின்னுபாருங்களேன்! தாஞ புரியும்!’’

என்று தான் ஒரு பிரசங்கத்தை நிகழ்த்தி முடித்துவிட்டு, பலராமனின் முதுகில் தட்டிக் கொடுத்தார் செயலாளர் சிங்காரவேலு!

பலராமனின் நண்பன் பகுனி வந்துகொண்டே ‘சரிதான் சிங்காரம்! 100 ஏகர் நிலத்தையும் ஆஸ்திபாஸ்தியையும் விட்டுவிட்டதிஞலேதானே பிரபலம் சாருக்கு ஏய் ஏய்’ அனுபவம் கிடைச்சுது. அதுமாதிரி என் பிரண்டுக்கும் கிடைக்கட்டுமேங்கிற நல்ல எண்ணமா இப்படி என்கரேஜ் பண்ணுறீங்க’’ என்ருன்.

திருவாளர் பிரபலம் எழுந்துகொண்டே சொன்ஞர் ‘‘இதோ பாருங்க மிஸ்டர்! எலெக்ஷன் விஷயத்தை விடுங்க! அது ஏதோ ஒரு மாதிரி சூதாட்டம்! சூதாட்டத்தை பஞ்சமாபாதகத்திலே ஒண்ணுன்னு சொல்லி இருக்காங்க. அதைப்போய் நாம ஏன் ஆடணும்? பட்டாலும் சிலபேருக்குப் புத்திவர்ரதில்லே. அதுமாதிரிதான் நானும்! கீழே இருக்கிறவங்க நாலுபேர் மேலே போகணும்ஞ, என்னைமாதிரி உள்ள கொஞ்சபேர் கீழே வந்துதானே ஆகணும்? மேலே போறவுங்களும் சரி, கீழே விழறவங்களும் சரி அததுக்குத் தகுந்த புத்தி படிச்சிக்கணும்! இல்லேன்ஞ, வண்டிக்காரன் மட்டும் ‘ஏய் ஏய்’ன்னு சொல்லி கேவலப்படுத்தமாட்டான்! வண்டி, மாடுங்கூட கேலி பேசும். நாயும் பேயும்கூட பிரலாபம் சொல்லும்! என்னமோ சமூகத்திலே உயர்ந்த இடத்திலே இருக்கிறதா ஒரு நெனைப்பிஞலதானே, அந்த ‘ஏய்ஏய்’பத்தி இப்படி ஒரு பிரச்னையே கிளப்புறேம்! இந்தக் குரலை தினம் தினம் எத்தனைபேரு கேட்டுக்கிட்டு—ஒதுங்கிப் போய்க்கிட்டிருக்காங்க—அவங்கமாதிரி நாமும் ஒதுங்கிட வேண்டியதுதாங்கிறது இப்பதான் எனக்குப் புரியுது. அந்தமாதிரி வழியிலே இருந்து மட்டுமில்லே மிஸ்டர்! நாம உயர்ந்த அந்தஸ்திலே இருக்கோம்—அவன் தாழ்ந்த அந்தஸ்திலே இருக்கான்ங்கிறது மாதிரியான எண்ணத்திலே இருந்துகூட ஒதுங்கிக்க வேண்டியதுதான்! நேரம் ஆயிட்டுது வரட்டுமா?’’ என்று நடக்கத் தொடங்கிஞர்! பரமசிவம் அவரைத் தொடர்ந்தார்! மற்றவர்கள் அவர்கள் போவதையே வெறிக்கப் பார்த்துக்கொண்டிருந்தனர்.

●

அவசர நிலைக்கு ஐந்தாண்டு நிறைவு

—[எஸ். ஆர்.]—

ஹிரோஷிமா குண்டு வீச்சினைப் பார்க்காவிட்டாலும் அதன் விளைவுகளை நேரிடையாக அனுபவிக்கின்றனர் இன்றைய ஜப்பானியர்கள்.

சுதந்திர நாட்டிலும் கட்டுப்படுத்தப்பட்ட சுதந்திரத்துடன் இருப்பது எப்படி என்பதனைக் கடந்த ஐந்தாண்டுகளாக அனுபவிக்கின்றனர் இந்தியத் துணைக்கண்டத்து மக்கள்.

1962-ம் ஆண்டு அக்டோபர் 26-ம் தேதி சீனப் படையின் ஆக்கிரமிப்பு உணர்வுடன் இந்திய மண்ணில் முன்னேறின.

அன்று குடியரசுத் தலைவரால் பிரகடனப் படுத்தப்பட்டது அவசர நிலையும் அதன் பிரிவான பாதுகாப்புச் சட்டமும்.

அவர்கள் விருப்பப்படிதான் என்ருலும் அந்த ஆக்கிரமிப்பு சீனர்களால் திரும்பப் பெறப்பட்டும் விட்டது.

என்ருலும் இங்கே அமுலான அவசர நிலை, பாதுகாப்புச் சட்டம் இரண்டும் இன்னும் நீடித்தபடி இருக்கிறது.

ஐந்து ஆண்டுகளுக்கும் சற்று சில நாட்கள் அதிகம் ஆகியிருக்கும் இந்த இரு சட்டங்களுக்கும் பின்னர் இந்தியாவில் மக்கள் தொகைக் கணக்குப்படி 500 லட்சம் புதிய உயிர்கள் தோன்றியிருக்கின்றன.

சரியாகக் குறிப்பிடுவதென்ருல் சுதந்திர நாட்டில் அடிமைச் சூழ்நிலைகளில் தோன்றியிருக்கும் 5 கோடி குடிமக்கள் அவர்கள். இந்த வகையில் அவர்களுக்கு இது ஒரு புதிய அனுபவம்தான்.

ஆக்கிரமிப்பின் விளைவாக இழந்துள்ள பல ஆயிரக்கணக்கான சதுர மைல் பரப்பினைப் பற்றி அரசு ஏதும் திட்டவட்டமான விளக்கங்களைக் கொடுக்கவில்லையாயினும் ஆக்கிரமிப்பின் பலனாக அமுலாக்கப்பட்ட இரு சட்டங்களும் எடுக்கப்பட்டு விடாமல் இருப்பதில் மட்டும் தீவிர ஆர்வம் காட்டி வந்திருக்கிறது.

தேவைப்பட்ட நிமிடத்துக்கு மேல் ஒரு நிமிடம்கூட அதிகமாக அவசர நிலை நீடிக்கப்படாது என்றுதான் திரும்பத் திரும்ப மத்திய அரசு சமாதானம் சொல்கிறதே ஒழிய "தேவையே இப்போது இல்லை" என்ற ஒரு கருத்து நிலவி வருவதை உணர்ந்ததாகவே காட்டிக்கொள்ளவில்லை.

1963-ம் ஆண்டு முதற்கொண்டே அவசர நிலை எடுக்கப்பட்டுவிட வேண்டும் என்ற பரவலான கருத்து எழுந்தது.

அரசியல் வாதிகள் — கட்சித் தலைவர்கள் மட்டுமல்லாமல் பிரபல சட்ட நிபுணர்கள் மற்றும் முக்கிய நீதிபதிகள் ஆகிய பலதரப்பட்டவரும் பகைவர்கள் ஆக்கிரமிப்பு அகன்றிருக்கும் நேரத்திலும் அவசரநிலை நீடிக்கப்பட்டு வருவதில் உள்ள மாறுபாட்டினைச் சுட்டிக் காட்டினர்.

1964 மார்ச்சு மாதத்தின்போது அப்போது உள்துறை அமைச்சராக இருந்த நந்தா அவசர நிலை நீடிக்கத்தான் வேண்டுமென்று ஒரு அறிவிப்பைத் தந்தாரே யொழிய "வெளியே சொல்லக் கூடாத காரணங்களுக்காக" என்ற போர்வையின் கீழ் அச்சட்டத்தை மேலும் நீடிக்கத்தான் வழி செய்தார்.

இடையில் மேலும் சில நீதிமன்றத் தீர்ப்புகள் அவசர நிலை நீடிப்பதில் உள்ள 'ஓட்டை'களை அம்பலப்படுத்தின. ஆனால் பிரதிபலிப்போ வேறு விதமாக இருந்தது. அப்போது காங்கிரசே எல்லா மாநிலங்களிலும் ஆட்சியில் இருந்த நேரம் சில முதலமைச்சர்கள் அவசர நிலை எடுக்கப்பட்டால் கட்சிக்கும் நிர்வாகத்துக்கும்டன் முதலில் ஆபத்து என்று அபயக் குரல் கொடுத்ததன் விளைவாக அச்சட்டம் மேலும் நீடிக்கப்பட்டது.

சமாதான விளக்கங்களில் தனது பங்கும் சோடை போகாமல் சாஸ்திரிக்குப் பின் பதவிக்கு வந்த இந்திராவும் 1966-ம் ஆண்டு மார்ச்சுத் திங்களின்போது ஒரு தடவை "தேவையில்லையென்ருல் ஒருநாள்கூட அவசர நிலை நீடிக்காது" என்று கூறிவைத்தார்.

இடையில் உண்மையாலுமே நடந்த இந்தியா பாகிஸ்தான் போர் சச்சரவுகளும் அவ்வப்போது திரும்பவும் சூடு பிடித்த சீன ஆக்கிரமிப்புகளும் அவசர நிலை எடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்குத் தற்காலிக அவகாசம் தந்தன.

இந்த ஒரு திருப்பத்தைப் புதுடில்லி கருத்தில் கொண்டிருந்தால்கூட, "அந்நிலை ஆபத்து என்ருல் மக்கள் எவ்வித அவசர நிலையையும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிருர்கள்" என்ற நிலை புலப்பட்டிருக்கும்.

ஆனல் எல்லாம் முடிந்து தேர்தல் காலத்தின்போதுகூட "சுதந்திரக் காற்று" வீசவில்லை.

ஒருசில பகுதிகள் நீங்கலாக ஏனைய இடங்களில் அவசரநிலை ரத்து செய்யப்படலாம் என்று வெளிவந்த யூகமும் கானல் நீராகவே இருந்தது.

அவசர நிலை எடுக்கப்பட்ட அடுத்த நிமிடமே மத்திய அரசு உட்பட பல அதிகாரிகள் வழக்கு மன்றங்களில் நிற்க நேரிடும். அவசர நிலையின்போது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அந்த அளவு அவர்களையே திருப்பிப் பாதிக்கும் என்ற ஒரு பயம் காட்டப்பட்டதன் விளைவாக இடையில் வந்த செய்தியும் செயலாக மாறவில்லை.

கடந்த ஜூன் மாதத்தின்போதுகூட மத்திய உள்துறை அமைச்சர், அவசரநிலை நீடிப்பதுபற்றி ஒரு புதிய சிந்தனையே நவம்பர் — டிசம்பர் மாதத்தில் மேற்கொள்ளப்படும் என நாடாளுமன்றத்தில் உறுதி கூறினர்.

ஆனல் இந்தத் தொடர் கூட்டத்திலும் இதுவரை நடந்துள்ள நிகழ்ச்சிகள் இச்சட்டம் எடுக்கப்படும் என்பதற்கான அறிகுறிகளைக்கூட கொடுப்பதாக இல்லை.

அவசர நிலை—பாதுகாப்புச் சட்டம் — ஆகிய இரண்டுமே சாதாரண தேவைக்குட்பட்ட நிர்வாகச் சட்டங்கள்போல் ஆகிவிட்டிருக்கின்றன.

நீடிப்பதற்கும் எடுக்கப்படுவதற்கும் வேறுபாடு தெரியாத நிலைக்கு மக்கள் இரண்டுக்கும் பழகிப்போயிருக்கிருர்கள்.

மத்திய ஆட்சியில் இரண்டு பிரதமர்கள் தேர்வு. இந்தியாவின் பாதிப்பகுதி மாநிலங்களுக்கு மேல் காங்கிரசல்லாத நிர்வாகம்-பொதுத்தேர்தல்கள்—புதிய சூழ்நிலைகள் — இத்தனை சனநாயகத் திருப்பங்களுக்குப் பின்னரும் அவசரநிலை இன்னும் நீடிக்கவேண்டுமென புதுடில்லி கருதுவது எந்த அடிப்படையில் என்பது புலப்படவில்லை!

ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3
63, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.